www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 29 | 01 ஆவணி 1996 | விலை: ரூபா 7.00

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் கல்வி, நாகரீகம், அயரா உழைப்பு போன்றவற்றிற்கு பெயர் பெற்றவர்கள். ஆனால் இன்று இலங்கைத் தமிழன் என்றால் கொலைகாரன், பயங்கரவாதி, போதைவஸ்து கடத்துபவன் என்றே உலகம் எம்மைப் பார்க்கின்றது.

# தமிழ் மக்கள் காட்டுமிராண்டிகளா?



உலகத்தின் எந்த மூலைமுடுக்குக்கு போனாலும், இலங்கைத் தமிழன் என்றால் அவன் வித்தியாசமாகவே அணுகப்படுகின்றான். அவ்வளவு தூரம் எமது நிலை தாழ்ந்துள்ளது என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

1977, 1983 ஆகிய காலகட்டங்களில் இலங்கையில் நடந்த இனக் கலவரங்களினால், முழுச் சிங்கள இனத்தையுமே சர்வதேச சமூகம் எள்ளி நகையாடியது. காட்டுமிராண்டிகள், மனித மாமிசத்தை புசிப்பவர்கள் என அவர்கள் ஏளனம் செய்யப்பட்டார்கள்.

புலிகள் உட்பட சகல தமிழ் இயக்கங்களும், வெளிநாடுகளில் இருக்கக்கூடிய தமிழ் அமைப்புக்களும் கூட சிறிலங்கா அரசை காட்டுமிராண்டித்தனமான அரசென்றும், அப்பாவி மக்களை அவர்கள் கொன்று குவிக்கின்றார்கள் என்றும் உலகெல்லாம் முறையிட்டோம்.

இதனால் தமிழ் மக்கள் மேல் சர்வதேச சமூகத்துக்கு இரக்கமும், அனுதாபமும் எற்பட்டதென்பது உண்மை. இன்று என்ன நடைபெறுகின்றது? அன்று அப்பாவித் தமிழ் மக்கள் மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டபோது அதைக் காட்டுமிராண்டித்தனமென வர்ணித்த நாங்கள் இன்று சிங்கள மக்கள் கொல்லப்படும்போது என்ன செய்கின்றோம்?

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் எத்தனை சிங்கள மக்கள் கொல்லப்பட்டார்கள்? யுத்தத்தின் மத்தியில் அகப்பட்டு கொல்லப்படுவதென்பது வேறு, திட்டமிட்ட ரீதியில் அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவிப்பது என்பது வேறு.

சிறிலங்கா இராணுவம் அப்பாவி தமிழ் மக்களை கொன்று குவிக்கின்றது என்பதற்காக, நாமும் அப்பாவிச் சிங்கள மக்களை கொன்று குவிக்கின்றோம் என்றால் அக் காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து இக் காட்டுமிராண்டித்தனம் எவ்வளவு தூரம் குறைந்தது.

புலிகளின் அப்பாவிச் சிங்கள மக்கள் மீதான தாக்குதலும், முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதலும், கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து கொண்டே வருகின்றது. அநுராதபுரம், அரந்தலாவை, கென்ற் பாம், டொலர் பாம், என்று தொடங்கி இன்று கொழும்பில் எத்தனை குண்டு வெடிப்புக்கள் நடைபெற்றுவிட்டன.

இறுதியாக மத்திய வங்கி, தெஹிவளை புகையிரதக் குண்டுவெடிப்பு போன்றவற்றில் எத்தனை மக்கள் கொல்லப்பட்டார்கள்; எத்தனை நூறு மக்கள் காயப்பட்டார்கள். 83 ஜூலையில் மனித நாகரீகமே மரணித்துவிட்டதாகக் கூக்குரலிட்ட நாம் இப்போது மௌனமாகியிருப்பது எந்த நாகரீகம் கருதி?

ஒரு சில அரசியல்வாதிகளின் புத்திபூர்வமற்ற முடிவுகளுக்காக அப்பாவி மக்களைத் தண்டிப்பது எவ்வகையில் நியாயம்? சின்னஞ் சிறார்கள், வாலிபர்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி இவர்கள் கொன்று குவிக்கப்படுவதை தமிழ் சமூகம் வேடிக்கை பார்க்கப் போகின்றதா?

எம்மைப் போன்றே அவர்களும் எத்தனை கனவுகள் கற்பனைகளுடன் வாழத்துடிக்கின்றார்கள்? இக் கொலைகள்மூலம் எத்தனை சிறார்கள் அநாதைகள் ஆக்கப்படுகிறார்கள்; எத்தனை குடும்பங்கள் தமது தலைவன் – தலைவியை இழந்து நடுத்தெருவுக்குத் தள்ளப்படுகின்றார்கள்? இவை எல்லாம் சரியானது போல் வேடிக்கை பார்ப்பது எத்தகைய மனிதநாகரீகம்? தமிழ் பொது மக்கள் கொல்லப்படுவதற்குப் பதிலாக சிங்களப் பொதுமக்கள் கொல்லப்படுவதும் நியாயம்தான் என்கிற அரக்கத்தனமான நியாயத்தையா நமக்குள் நாம் சொல்லிச் சமாதானப்பட்டுக் கொள்கிறோம்?

இதற்கும் தமிழ் மக்களுக்கும் சம்பந்தம் இல்லை, இது புலிகளின் கோரத்தனமான வேலை என நாம் நழுவிச் செல்ல முடியாது. சர்வதேச சமூகம் இதனை வெறும் புலிகளின் குதறல்களாகப் பார்க்கவில்லை. தமிழ்ப் புலிகளின் (Tamil Tigers) கோரத் தாக்குதல்கள் என்றே இதனைப் பார்க்கின்றன.

தமிழ் மக்களின் பெயரால்தான் புலிகள் இப்படியான அட்டூழியங்களைச் செய்கின்றார்கள். தமிழ் மக்களின் பெயரால் அப்பாவிகளைக் கொல்வதற்கு இவர்களுக்கு யார் அனுமதி அளித்தது? இவர்களின் இப்படியான கொலைகளை நாம் கண்மூடிப் பார்த்துக் கொண்டிருக்கும்வரை இவர்கள் இதனைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார்கள். தமது உரிமைகளுக்காக அரசு இயந்திரத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடுவது என்பது வேறு, அப்பாவி மக்களை கொலை செய்து குவிப்பது என்பது வேறு. இக்கொலைகள் எந்தவிதத்திலும் நியாயப் படுத்த முடியாதவை.

அது மாத்திரமல்ல இக்கொலைகள் சர்வதேச ரீதியாக எமது போராட்டத்தையே கொச்சைப்படுத்துவதற்கு காரணமாய் அமைந்து வருகின்றது.

இக்கொலைகளை பெரும்பான்மையான சாதாரண பொது மக்கள் ஏற்றுக்கொள்ளாவிடினும், இதனை கைதட்டி வரவேற்கும் ஒரு சிலரும் இருக்கத்தான் செய்கின்றார்கள். பொலீஸ், இராணுவம் இவர்களது அடையாள அட்டைகளை பரிசோதிக்கும் போது எரிச்சலுறும் இவர்கள், அப்பாவி மக்கள் கொல்லப்படும் போது மட்டும் குதூகலிக்கின்றார்கள்.

இவை தவிர, புலிகளின் இப்படியான கொடூரத் தாக்குதல்களை புரட்சிகர வன்முறை என நாமகரணம் சூட்டி அதற்குச் சிந்தாந்த நியாயம் கற்பிக்கும் அற்புதமான முற்போக்கு புத்திஜீவிகள் சிலரும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள் என்பது நமது மக்கள் மேலும் அசிங்கப்பட்டுக் கொள்வதற்குரியதுதான். இவர்களைக் கேட்டால், இராணுவத்தின் வன்முறைக்கு இதுதான் பதில் என கூசாமல் பேசவும், எழுதவும் செய்வது தான் இன்னும் விசனத்துக்குரியது.

வேறு சிலருக்கோ இத்தகைய படுகொலைகளுக்குப் புலிகள் உரிமை கோராமல் விடுவது, தங்கள் காட்டுமிராண்டிக் குணத்தை மறைத்துக் கொள்ளக் கவசமாகி விடுகிறது.

ஒரு பகுதியில் இருக்கும் அப்பாவி மக்களை அழிக்கும் எமக்கு, எமது உரிமைக்காகப் போராடுகிறோம் எனச் சொல்வதற்கு என்ன யோக்கியதை இருக்கின்றது. இன்று எமது போராட்டம் சர்வதேச சமூகத்தின் ஆதரவை இழந்து போவதற்கு முக்கியமான காரணம், இவ்வாறான மனிதப் படுகொலைகளே. இந்தக் க்லாசாரத்தை அறிமுகப்படுத்தி அதனைத் தொடர்ந்து நடத்தி வருபவர் புலிகளே.

இவர்கள் வெறும் புலிகள்அல்ல. தமிழ் புலிகள் என நாமகரணமும் சூட்டியுள்ளதால், தமிழ் சமூகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் இது தொடர்பான அக்கறை எடுக்க வேண்டும். இல்லையேல் முழு தமிழ்ச் சமூகமுமே காட்டுமிராண்டிகளாய்த்தான் கணிக்கப்படுவார்கள்.

எனவே அடிப்படை மனித நீதிகள், தமிழ் மக்களின் உரிமைகள் போன்றவற்றில் அக்கறையுள்ளோர் அனைவரும் இதனைக் கண்டிக்க வேண்டுமென்பதுடன், இவ்வாறான மனிதப் படுகொலைகள் இன்னொருமுறை நடக்கக்கூடாது என்பதிலும் நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

புலிகள்தான் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இன்னும் போராடுகின்றார்கள், அவர்களுக்கு

2

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## தீர்வு நகல் திட்டத்திற்கு ஒரு வயது

இந்நாட்டில் சமாதானத்தை, அரசியல் தீர்வை ஏற்படுத்துவேன் என உறுதிமொழி அளித்தவர்கள், இன்று யுத்தத்தை எவ்வாறு நடத்துவது என்று திணறிக் கொண்டிருக்கின்றார்கள். இராணுவத்தில் இணைவதைக் கட்டாயமாக்குவதா? இல்லையேல் 'சமுர்த்தி' அமைப்பினூடாக இளைஞர்களை திரட்டுவதா என்று அங்கலாய்க்கும் நிலைக்கே அரசு சென்றுள்ளது.

யாழ்குடாநாட்டை அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததும், இதனால் புலிகள் வன்னிக்குப் பின்வாங்கிக் கொண்டமையும் நடந்து முடிந்த சம்பவங்கள். மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்து, அரசியல் இராணுவ ரீதியாகப் பலவீனப்பட்டு, சர்வதேச ரீதியாக பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தப்பட்ட நிலையில், தனது இராணுவ பலத்தை நிரூபிக்கவும், இதன்மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தான் இழந்துள்ள செல்வாக்கை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதற்கும், இதற்கு மேலாக மனோவியல் ரீதியாக பலவீனப்பட்டு சோர்ந்துபோய் இருக்கும் புலி இயக்க உறுப்பினர்களை உற்சாகப்படுத்தவுமே புலிகள் முல்லைத்தீவு இராணுவ தளத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். இத் தாக்குதலில் குறைந்த பட்சம் 1000 தோழர்களையாவது இழக்க புலிகள் தயாராக இருந்தனர். ஆனால், 300–500 வரையிலான தனது தோழர்களை இழந்து முல்லைத்தீவு தளத்தை நிர்மூலமாக்கியது பிரபாகரனுக்கோ, புலிகளுக்கோ வெற்றியே.

இதனால் தென்பகுதியில் ஏற்பட்ட ஆவேசங்களை அடக்குவதற்கும், அரசு மீது ஏற்பட்டு வரும் நம்பிக்கையீனங்களை போக்குவதற்கும், அரசு உடனடியாகவே கிளிநொச்சியைக் கைப்பற்ற தனது தாக்குதலை ஆரம்பித்தது. இதில் பரந்தனைக் கைப்பற்றிய இராணுவத்தினர், கிளிநொச்சியை கைப்பற்றும் வரை யுத்தத்தை தொடருவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம். இந்த யுத்தத்தில் ஏற்கனவே இருதரப்பிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அதுமாத்திரமல்லாமல், கிளிநொச்சி நகரில் இருந்த அனைத்து மக்களும் அகதிகளாகி இடம்பெயர்ந்துள்ளனர்; செல்லடி, விமானத் தாக்குதல் போன்றவற்றிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவை ஒருபுறமிருக்க, பொருளாதார ரீதியாக அரசு மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பிரேமதாசா காலத்தில் இருந்த பாதுகாப்புசெலவினம் இன்றைய ஆட்சியில் இருமடங்காகி உள்ளது. இதனால் எவற்றுக்கெல்லாம் மானியம் கொடுத்தனரோ அப்பொருட்களின் விலை யாவும் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. சாதாரண மனிதனின் உணவான பாணுக்கே மூன்றிற்கு மேற்பட்ட தடவை விலை உயர்த்தப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு வேதனம் வழங்கவே அரசு திண்டாடும் நிலைமை. ஊதியம் உயர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு முழுமையாக அவ்வூதியத்தைக் கொடுக்க முடியாத நிலை. அதுமாத்திரமல்லாமல், வடமாகாணத்தில் நிவாரணப் பணிகளைச் செய்யவே அரசு நிதியில்லாமல் திண்டாடுகின்றது. இந்நிலையில், அநாவசியமாக ஓர் வெல்லமுடியாத யுத்தத்தை அரசு தொடர்ந்தும் நடத்துவது புத்திசாலித்தனமுமல்ல ஆரோக்கியமானதுமல்ல.

இதனைப் போன்றே புலிகளும், தமது இருப்பை, வலுவை வெளிக்காட்டவே யுத்தத்தை தொடர்கின்றார்களே அல்லாமல், தமிழீழத்தை வென்றெடுத்து விடுவோம் என்ற நோக்கில் அல்ல. இதனால் துன்பப்படும் மக்கள், அநாவசியமான இறப்புகள், கொலைகள், அழிவுகள்.... இவற்றைப் பற்றி புலிகள் சிந்திக்கின்றார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்றே கூறலாம். வெளியில் இருந்து பார்க்கும் தமிழ்மக்களின் ஒரு பகுதியினர் கூட, 'ஆகா புலிகளைப் பார், ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தைக் கொலை செய்து, முல்லைத்தீவு இராணுவ முகாமை நிர்மூலமாக்கி விட்டார்கள்' என்று புளகாங்கிதம் அடையலாம். அதுமாத்திரமல்ல, 1000இற்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்றவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தைப் பிடித்து, ஏன் தமிழீழத்தை அடைந்துவிடலாம் என்று கூடச் சிந்திக்கலாம். இதுவரை நடந்து வந்ததும் அதுதான். புலிகள் எப்பொழுதெல்லாம் தாக்குதலில் வென்றார்களோ, அதனை அவர்கள் திருவிழா ஆக்கினார்கள். மக்களும் அதனை நம்பினார்கள். புலிகள் ஈழத்தை அடைந்து விடுவார்கள் என்று மனக்கோட்டை கட்டினார்கள். ஆனால் புலிகள் யாழ்ப்பாணத்தை இழந்தபோதுதான் பலருக்கு உண்மை உறைக்கத் தொடங்கியது.

விடுதலைப்போராட்டம் என்பது ஒருசில தாக்குதல்களின் வெற்றியில் மாத்திரம் தங்கி இருப்பதல்ல. அதற்கு சர்வதேச ஒத்துழைப்புத் தேவை; அங்கீகாரமும் தேவை. இவற்றுக்குமேலாக, மக்களின் முழு ஈடுபாடும் தேவை. ஆனால் இவை எல்லாவற்றையும் இழந்து, வெறும் இராணுவத் தாக்குதல்களால் மாத்திரம் விடுதலையைப் பெற்றுவிட முடியாது. இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதும் அதுதான். புலிகளின் தாக்குதல் ஒருபுறம், அதற்குப் பதிலான இராணுவத் தாக்குதல்கள் மறுபுறம். அரசு குடாநாட்டைக் கைப்பற்றியது. அதற்குப் பதிலீடாக புலிகள் முல்லைத்தீவு ராணுவமுகாமை நிர்மூலமாக்கினார்கள். புலிகளின் தாக்குதலுக்குப் பதிலீடாக இராணுவம் இன்று கிளிநொச்சியை தாக்குகின்றது. இது ஓர் வட்டம்போல், தாக்குதல்–பதில் தாக்குதல் என்ற வடிவத்தில் போகின்றதே தவிர, இத் தாக்குதல்களுக்கு முடிவெதுவும் எற்படப் போவதில்லை.

இதனைப் புரிந்துகொண்டே இருபகுதியினரும் மோதுகின்றார்கள் என்பதே வேதனைக்குரியது. நாட்டின் முன்னேற்றத்தை, மக்களின் அவலங்களைப் புரிந்துகொண்டால் மாத்திரமே இதற்கு ஓர் தீர்வினை எட்ட முடியும். ஆனால் இரு பகுதியினருக்குமே இவ்வுண்மை புலப்பட்டதாக இல்லை. இவர்கள் பந்தாடுவது அப்பாவி மக்களையே. யுத்தத்தை நடாத்தும் இருபகுதியில் இருக்கும் தலைமைத்துவங்களுக்கும் எந்தவித கஷ்டமோ, துன்பமோ இல்லை. பலிக்கடாக்களாக இருப்பது, புலிகளிலும் இராணுவத்திலும் இருக்கும் சின்னஞ்சிறார்களே.

எனவே இந்த நிலை நீடிப்பது, யாருக்குமே நல்லதல்ல. இந்த யுத்தத்திற்கு ஏதோ ஒருவகையில் முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும். தீர்வொன்றை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான வழியைக் கண்டாக வேண்டும். உருப்படியான பேச்சுவார்த்தை ஒன்றைத் தொடங்குவதே இதற்கான முதல் படியாகும். எனவே இந்நாட்டில் இருக்கும் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அதற்கான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

இது உள்நாட்டுப் பிரச்சினை, இதனை நாமே தீர்த்துக்கொள்வோம் என்பதெல்லாம், வெற்றுப்பேச்சே தவிர, இதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை. புலிகளும் கூட இராணுவம் வாபஸ்பெற்றால் தான் நாம் பேசுவோம் என்றால், அதுவும்கூட வெற்றுப் பேச்சுதான். தமது பலம் பலவீனங்களை இவர்கள் நன்றாகவே உணர்வார்கள். இப்போராட்டத்தில் தாம் வெல்லப் போவதில்லை என்பதையும் இவர்கள் உணர்வார்கள். இந்நிலையில் இவர்கள் ஏன் இதனைத் தொடர வேண்டும்? தம்மால் முடியாவிட்டால், மூன்றாவது நாடொன்றின் மத்தியஸ்தத்தினூடாகவேனும் இப்பிரச்சினைக்கு ஓர் சமாதானத்தீர்வு காண வேண்டும். எனவே வறட்டுச் சித்தாந்தங்கள், வறட்டுக் கௌரவங்கள், யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட சிந்தனைகள் என்பவற்றைக் கைவிட்டு, உடனடியாகப் பேச்சு வார்த்தை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். விரும்புகின்றது.

## தமிழ் மக்கள் காட்டுமிராண்டிகளா?...

(முன்பக்கத் தொடர்ச்சி)

நாம் உதவியாக இருக்க வேண்டும் என்று நம்பவர்களுக்கும், அதற்குப் பல்வேறு வழிகளிலும் ஆதரவும், ஒத்துழைப்பும் கொடுப்போர்களுக்கும், இக்கொலைகளை நிறுத்தும்படி கோருவதற்கான முழுத் தார்மீகஉரிமைகளும் உண்டு.

தாய் தகப்பன், அண்ணன், தங்கை, மாமன், மச்சாள் என பலரை நாம் இழந்தோம் எனவே அவர்களும் இழக்கட்டும் என நினைத்தால் நாம் மனிதப் பிறவிகளாக இருக்க முடியாது.


எமது போராட்டம், அரசுக்கெதிராக, அரச இயந்திரத்திற்கெதிராக என்றால், அதற்கெதிராக அது இருந்துவிட்டுப் போகட்டும். அதனை விடுத்து அப்பாவிகளின் மீது குண்டுத் தாக்குதல்களை நடாத்துவது நாகரீகமுமல்ல, அதனைப் பார்த்துக் கொண்டிருப்பது மனிதாபிமானமும் அல்ல.

போராட்டத்தில் இதெல்லாம் சகஜம். இங்கு மாத்திரமா இதெல்லாம் நடைபெறுகின்றது? பொஸ்னியாவில் ஆயிரக்கணக்கானோரை புதைக்கவில்லையா? கம்பூச்சியாவில் 10 லட்சத்திற்கு மேற்பட்டோரை பொல்பொட் கொன்றொழிக்கவில்லையா? மில்லியன் கணக்கான யூதர்களை ஹிட்லர் கொன்றொழிக்கவில்லையா? இங்கு மிகச் சொற்பமான சிங்கள மக்களைத்தானே கொன்றொழித்துள்ளார்கள். அதுவும் ஓர் அரசியல் ஆயுதமாக அரசைப் பணியவைக்கத்தானே இதனைச் செய்கின்றார்கள் என யாராவது கருதினால், ஒன்று அவர்கள் பிழையான முன்னுதாரணங்களைப் பின்பற்றுகின்றார்கள். இரண்டாவது அப்பாவி மக்களின் வாழ்க்கையை என்றும் நாம் அரசியல் ஆயுதமாக பாவிக்க இடமளிக்கக் கூடாதென்பது.

அப்பாவி மக்களைக் கொல்வது மிகவும் சுலபமாக இருக்கலாம், ஆனால் அது ஓர் விடுதலைப் போராட்டத்துக்கு நன்மையிலும் விட தீமைகளையே கூடுதலாக விளைவிக்கும்.

எனவே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் அக்கறை இருக்கக்கூடிய அனைத்து தமிழரும், அவர்கள் உள்நாட்டில் இருந்தாலென்ன, வெளிநாட்டில் இருந்தாலென்ன பல்கலைக்கழக மாணவர்கள், பிரதேச சபைகள், சமய நிறுவனங்கள், கலை இலக்கியப் பேரவைகள், கலாசார நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், வெளிநாடுகளில் இருக்கக்கூடிய தமிழ் அமைப்புக்கள் யாவும், புலிகளின் இக்காட்டுமிராண்டித்தனமான செயல்களை நிற்பாட்டும்படி குரல் கொடுக்க வேண்டும், அதற்கான தீர்மானங்களை நிறைவேற்றி அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

இதன் மூலம் தமிழ் மக்கள் நாகரீகமானவர்கள், பண்புள்ளவர்கள், இப்படியான கோரத்தனங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்பதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டும். ●



## புதிய தரிசனங்களின் குரல்

சோஷலிசம் அல்லது சமத்துவ சமூகவாழ்வு என்பது எத்தனையோ நூற்றாண்டுகளாக மனிதன் கண்டுவந்து கொண்டிருக்கும் பொற்கனவு. இந்த விழுமியத்தை நோக்கியே மனித குலம் என்றென்றும் பயணம் செய்யும். இந்த நெடும் பயணம் சீராக நடக்க ஜனநாயகமே வழிமுறை. அப்படிச் சொல்வதானால் நான் பலாத்காரத்தின் பாத்திரத்தை மறுக்கிறேன் என்பதல்ல பொருள். பலாத்காரத்தின் தேவையை உணர்வதும், உணர்த்துவதும், நடைமுறைப்படுத்துவதும், நடைமுறைப்படுத்த செய்வதும் பரந்துபட்ட மக்கள் திரளே. மார்க்சியம் 20ம் நூற்றாண்டு வரையுள்ள மேன்மையான மனிதச் சிந்தனைகளைத் தன் வயப்படுத்திக் கொண்டது போல் இந்த நூற்றாண்டின் புதிய சமூக அறமான ஜனநாயகத்தையும் தன்வயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லா அதிகார மையங்களையும் நொறுக்குதல் என்பது நவீனர்களின் குரல்களில் ஒன்று. நொறுக்குதல் என்பது வரலாறுநெடுக நடந்து கொண்டுதான் வருகிறது. பழைய அதிகாரபீடங்களின் நொறுங்கல்களிலிருந்து வெளிவந்தவையோ புதிய அதிகார மையங்கள். அழிப்பது அழிந்ததாகப் பரிணாமம் பெறுவதுதான் இயல்பு. இன்று இந்த நிமிடம் கூட எல்லா நிலைகளிலும் உண்மை இதுதான். பழைய அரசு அதிகார பீடங்களை நொறுக்கப் புறப்பட்டவை புதிய பீடங்களாகி விட்டன. பழைய சாதி–சமய அதிகார பீடங்களைத் தகர்த்திடப் புறப்பட்டவர்கள் இன்று புதிய சாதிய சமய அதிகார பீடங்களாக இறுகிக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். இதற்கு மாற்று? பழையதோ புதியதோ எல்லா வடிவங்களுமே ஜனநாயகப் படுத்தப்பட வேண்டும். பீடங்கள் இறுகிவிடாமல் ஜனநாயகம் பாதுகாக்கும். புதிய தரிசனங்களின் வலிமையான குரல் இது.

**தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!**

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

புதியகண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு.

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-I,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

படிப்பகம்

# ஒற்றுமையாக விரும்புகிறோமா?



விதுரன்

*"நமது நாட்டின் ஒருமைப்பாடு, நமது மக்களின் ஐக்கியம், நமது பல்வேறு தேசிய இனங்களின் ஐக்கியம் இவை நமது லட்சியத்தின் நிச்சய வெற்றிக்கான அடிப்படை உத்தரவாதங்களாகும்."*

–இது சீன மக்களின் விடுதலைக்காக போராடிய தலைவர் மாவோவின் மேற்கோள்களில் ஒன்று. இது ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை இரத்தினச் சுருக்கமாக எமக்கு புலப்படுத்துகிறது.

நம்மத்தியிலும் அவ்வப்போது ஐக்கியம் பற்றிப் பேசப்படுவதுண்டு. இன்றும் ஐக்கியம் பற்றிப் பரந்தளவில் பேசப்படுகின்றது. அண்மைக் காலமாக தமிழ் கட்சிகளின் அரசியல் மேடைகளிலும் மீண்டும் ஐக்கியம் முக்கியம் என்று வலியுறுத்தப்படுவதோடு அதற்கான அக்கறையிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உதட்டில் தேன் உள்ளத்தில் தேள் ஒற்றுமை ஆகாது

ஒற்றுமை அவசியமானதுதான். தமிழ் மக்களது உரிமைகள், அபிலாஷைகளை ஒன்றுபட்டு வலியுறுத்த வேண்டியதும் அவற்றை எய்துவதற்காக ஒன்றுபட்டு போராடுவது, கருமமாற்றுவதும் காலத்தின் தேவையாக உள்ளது.

தமிழ்க் கட்சிகள் இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமை பற்றி தீவிரமாக பேசப்பட்டாலும், ஐக்கியம் தொடர்பான உண்மையான அர்த்தம் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதற்கு சான்றுகள் இல்லை.


மக்களின் முன்னே மேடையில் ஐக்கியம் பற்றி வாய்வலிக்க பேசினாலும் மேடையை விட்டு கீழே இறங்கியதும் நிலைமை தலைகீழாகிவிடுகிறது. ஐக்கியத்தின் முக்கியம் உணரப்படாமல் புறக்கணிக்கப்படுகிறது. நாளாந்த நிகழ்வுகளில், நடைமுறைவேலைகளில் ஐக்கியத்திற்கான நாட்டம் வெளிப்படுவதில்லை.

வவுனியாவில் நடைபெற்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மேதின விழாவில் உரையாற்றியபோது ரெலோ இயக்கப் பிரதிநிதி வினோ அவர்கள் இதனை சுட்டிக்காட்டினார். ஐக்கியத்தை கட்ட வேண்டும் என்று சொல்லிக்கொண்டே சக இயக்க உறுப்பினர்களை கட்டிப்போட்டு நையப்புடைக்கும் நடவடிக்கைகள் தொடர்வதை அவர் வேதனையோடும் வெறுப்போடும் குறிப்பிட்டார்.

ரெலோ இயக்கம் கூட இதற்கு விதிவிலக்காக நடந்து கொண்டதற்கு கடந்தகால உதாரணங்கள் இல்லை. இனிவரும் காலங்களிலேயே அவர்களும் இதனை நிருபித்தாக வேண்டும். ஆனால் அவர் குறிப்பிட்டதுதான் உண்மை நிலை.

சக அமைப்புக்களுடன், நண்பர்களுடன் ஏற்படும் பிணக்குகளை முரண்பாடுகளை எவ்வாறு கையாள்வது தீர்த்துக்கொள்வது என்ற கோட்பாட்டு ரீதியான தெளிவின்மையும் நீண்டகால நலனுக்காக உடனடி நலன் விட்டுக்கொடுக்கப்படலாம் என்ற தூரநோக்கின்மையுமே இதற்கு காரணங்களாகும்.

வெளியே



உள்ளே



## கடந்தகாலக் கூட்டுகள் உடைந்துபோனது ஏன்?

எதிரியுடனான முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ள நாம் மேற்கொள்ளும் அதே வழிமுறைகளை நண்பர்களுடனான முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கும் பிரயோகிக்க முடியாது; பிரயோகிக்கக்கூடாது.

ஆனால் இங்கு நண்பர்களுடனான முரண்பாடுகளையும் ஆயுதமுனையிலேயே தீர்க்க முனையும் போக்கையே காணமுடிகிறது. அது தவறானது எனினும் எம்மத்தியில் வழமையாய் உள்ளது.

நண்பர்களுடன் தோன்றும் பிணக்குகள் முரண்பாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் விமர்சனம் மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற கோட்பாடு பேணப்படுவதில்லை. இதனால்தான் தமிழ் இயக்கங்களிடையே ஏற்கனவே இருந்த இணக்கம், உருவான ஐக்கிய முன்னணி நிலைக்கவில்லை.

> ஒற்றுமை பற்றி உண்மையாக அக்கறையிருப்பின், இவற்றை நாம் கவனத்திற்கெடுத்தாக வேண்டும். அல்லாமல் 'நாம் ஐக்கியத்தை விரும்புகிறோம்; ஒற்றுமைக்குப் பாடுபடுகிறோம்' என்று கூறுவது புலிகள், 'பேச்சுவார்த்தையை நாமும் விரும்புகிறோம்' என்று கூறுவதற்கு ஒப்பானது.

புலிகள் கூடி இருந்தே குழிபறித்தார்கள். ஐக்கிய முன்னணிக்குள் இருந்துகொண்டே ஏனைய இயக்கங்களை அழிக்க முற்பட்டார்கள். அது ஐக்கிய முன்னணியையும் எமது போராட்டத்தையுமே சின்னாபின்னப்படுத்தியது என்பது எல்லோருக்கும் தெரிந்த வரலாற்று உண்மை.

ஆனால் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த ஏனைய இயக்கங்கள் ஐக்கிய முன்னணியின் நெறிமுறைகளை வழுவாது பின்பற்றினார்கள் என்றுகூறமுடியாது. புலிகள் குழிபறிப்பதற்கு முன்னரே ஐக்கிய முன்னணியின் நெறிமுறைகளை மீறியும் உதாசீனம் செய்தும் ஏனையவர்களும் ஐக்கிய முன்னணியை சிதைத்துக் கொண்டும் செயலற்றதாக்கிக் கொண்டுமிருந்தார்கள். இவற்றை மறுக்கவோ மறந்துவிடவோ முடியாது.

## ஒற்றுமைக்கு உரிமை கோருவதல்ல; உரிமைகளைப் பெறவே ஒற்றுமை

ஒன்றாயிருந்த ஐந்து எருதுகளை சிங்கத்தால் வெல்ல முடியவில்லை என்ற மரபுவழிக் கதைகளின் அடிப்படையில் மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்கள். ஆனால் அரசியல் அமைப்புக்கள் இதனை விடவும் சற்று ஆழமாக அதன் அவசியத்தை புரிந்து கொள்வதுடன் அதன் சாத்தியங்கள் குறித்து ஆராயவும் வேண்டும்.

ஐக்கியம் என்பது, ஒரு இயக்கம் தன்னை மட்டும் வளர்த்துக் கொள்வதற்காக, அல்லது மக்கள் மத்தியில் தன்னை நிலைநிறுத்துவதற்கு ஒரு வழிமுறையாக கருதப்படுகிறது.

பரந்துபட்ட மக்கள் ஒற்றுமையை நேசிக்கிறார்கள் என்ற காரணத்தினால் 'நாங்கள்தான் ஐக்கியத்திற்காக பாடுபட்டோம். நாமே அதற்கு முன்னோடிகளாயிருந்தோம். நாமே ஐக்கியத்தை உருவாக்கினோம்.' என்று சொல்லியே குறுக்குவழியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவிடத் துடிப்பதை காணமுடிகிறது.

ஐக்கியத்தின் மூலம் ஈட்டப்பட்ட சாதனைகளை விளக்கி, ஐக்கிய முன்னணிக்கு மக்களின் ஆதரவைப் பெருக்கி எமது போராட்டத்தில் வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, உடனடியாக மக்களது மொத்த ஆதரவும் தமக்கே கிடைத்துவிட வேண்டும் என்றபேராவலுடன் செயற்படுவதையும் எமது கடந்தகால வரலாறு முழுவதும் காணலாம்.

ஒவ்வொரு அமைப்பும் தங்கள் வளர்ச்சி பற்றியே அக்கறை கொண்டிருப்பது தவறில்லை. ஆனால் அவர்கள் ஏனைய அமைப்புக்களின் இருப்பை, சமூக யதார்த்தத்தை அங்கீகரிக்கும் பக்குவம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். பல்வேறு இயக்கங்களின் தோற்றத்திற்கும் இருப்புக்கும் சமூக காரணங்கள் உண்டு என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

## தவறுகளைக் கண்டுகொள்ளாமல் விடுவதற்கல்ல ஐக்கிய முன்னணி

கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் குறைந்தபட்ச உடன்பாடுகளுடன், குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு கருமமாற்றும் அதேவேளை, ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அமைப்புக்களின் தவறான போக்குகளை விமர்சிப்பதும் அதன்மூலம் முரண்பாடுகளை தீர்த்து ஒரு புதிய அடிப்படையில் மேலும் ஐக்கியப்படுதலும் வேண்டும்.

இதற்கு ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிப்பவர்கள் குறைந்தபட்சம் ஜனநாயக கோட்பாடுகளை செவ்வனே புரிந்துகொண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பவர்களாயிருப்பது முக்கியம். அத்துடன் விமர்சனத்தை ஏற்று தவறுகளைத் திருத்திக் கொள்ளும் பக்குவமும், விமர்சனம் என்ற பேரில் வரைமுறையின்றி தாக்கும் போக்கை தவிர்ப்பதுவும் அவசியம்.

எமது இலட்சிய வெற்றியை நிச்சயப்படுத்தும் நோக்குடன் ஐக்கிய முன்னணி உருவாக்கப்படுவதனால் வெற்றிக்கு ஊறுவிளைவிக்கும் எந்த ஒரு வழிமுறையும், செயலும் விமர்சிக்கப்பட வேண்டும். ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிப்பவர்களும் அத்தகைய விமர்சனத்திற்கு விலக்கானவர்களாக முடியாது.

தமிழ் அரசியல் அரங்கில் ஐக்கியம் என்று வந்துவிட்டால் ஐக்கிய முன்னணிக்குள் ஒருவரைஒருவர் விமர்சிப்பதை தவிர்த்துக் கொள்ளலாம் என்று தவறாக அர்த்தம் கொள்ளப்படுகிறது. கண்டுகொள்ளாமல் விட்டுவிட வேண்டும் என்றே விரும்பப்படுகிறது. எனவே முதலில் இத்தகைய தவறான நிலைப்பாடுகளிலிருந்து நாம் மீளவேண்டும்.

## ஐக்கியத்தின் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்துவோம்

ஒற்றுமைக்காக குரல் கொடுப்பது அல்லது ஐக்கிய முன்னணிக்காக அழைப்புவிடுவதற்கு முன்னர் நாம் வெவ்வேறு அமைப்புக்களையும் உள்வாங்கி இணைந்து செயல்படுவதற்கு ஏற்றவகையில் எமது கோட்பாடுகளை நடைமுறைகளை மீள்பரிசீலனைக்குட்படுத்துவதும், புனருருவாக்கம் செய்துகொள்ள வேண்டியதும் இன்றுள்ள நிலையில் தேவையாக உள்ளது என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்வது அவசியம்.

ஐக்கியம் பற்றி ஒற்றுமை பற்றி பேசுபவர்கள் இவற்றையெல்லாம் மனங்கொள்ளல் வேண்டும். இவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு ஒற்றுமை பற்றிப் பேசுவதால் பயனில்லை.

எனவே, இவற்றைப் புரிந்துகொண்டு, அதன்பின்னர் ஐக்கிய முன்னணியின் நோக்கங்களை வரையறை செய்து வேலைத்திட்டங்களை வகுத்து திட்டவட்டமான முடிவுகளுடன், அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் முடிவுகளை உறுதியாக பின்பற்றுவது என்ற உத்தரவாதத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டாலே ஐக்கிய முன்னணியின் முழுமையான ஆற்றல் வெளிப்படும். அது எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கும் எமது மக்களின் மேம்பாட்டுக்கும் நிச்சயம் வழி வகுக்கும்.

ஒற்றுமை பற்றி உண்மையாக அக்கறையிருப்பின், இவற்றையெல்லாம் நாம் கவனத்திற்கெடுத்தாக வேண்டும். அல்லாமல் 'நாம் ஒற்றுமையை விரும்புகிறோம். ஐக்கியத்திற்காக பாடுபடுகிறோம்' என்று கூறுவது புலிகள், 'பேச்சுவார்த்தையை நாமும் விரும்புகிறோம்' என்று கூறுவதற்கு ஒப்பானது.

## கூறுபட்டு உறுதி கெட்டோம் கூட்டமைத்து வெற்றி காண்போம்

தமிழ் கட்சிகள் இயக்கங்களை பொறுத்த வரையில் பாரிய கொள்கை கோட்பாடுகள் சித்தாந்த வேறுபாடுகள் காரணமாகவே



> எதிரியுடனான முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ள நாம் மேற்கொள்ளும் அதே வழிமுறைகளை நண்பர்களுடனான முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கும் பிரயோகிக்க முடியாது; பிரயோகிக்கக்கூடாது.


பிரிந்து நிற்பதாகவோ, எல்லோருமே தமது கொள்கை கோட்பாடுகள் சித்தாந்தங்கள் குறித்து தெளிவான வரையறைகளை செய்து கொண்டிருப்பதாகவோ, அவற்றை உறுதியாக பின்பற்றிவருவதாகவோ கூறி எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டியதில்லை.

காலங்காலமாக தமிழ்ச் சமூகத்திடம் ஊறிப் போயிருக்கும் பிற்போக்குத்தனங்கள், குறுகிய சிந்தனைகளின் அடிப்படையிலேயே தமிழ் இயக்கங்கள்–கட்சிகளும் தமிழ் மக்களை கூறுபோட்டுக் கொண்டிருக்கின்றன.

வெகுஜனங்கள் இவற்றிலிருந்து விடுபடுவதும், அரசியல் இயக்கங்கள் இவற்றிலிருந்து விடுபடுவதும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. வெகுஜனங்கள் விழிப்புணர்வு பெறும்போது தவறான போக்குகள் தலையெடுக்க முடியாது. அதேசமயம் வெகுஜனங்களை விழிப்புணர்வு பெறச்செய்வது அரசியல் இயக்கங்களின் பணியாகவும் ஆகிறது.

எனவே, ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணிக்கூடாகவேனும் இதனைச் சாதிக்க முடிந்தால் தமிழ் மக்களின் அரசியலும் அர்த்தம் பெறும்; அத்தகைய ஐக்கிய முன்னணியும் அர்த்தமுள்ளதாகும். ●

---



சிறந்த மனிதநேய வாதியும் லிபரல் கட்சித் தலைவருமான கலாநிதி சானக அமரதுங்க அவர்களின் அகால மரணம், இந்நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் விரும்புபவர்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும். நீதியின்பாலும் மனிதநேயத்தின் பாலும் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையே சானகவினது துணிச்சலான கருத்துக்களுக்கு அடிப்படை. இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி அரசியல் அமைப்பு. இரு சபைகளைக்கொண்ட மத்தியஅரசு எனும் திட்டத்தை முன்வைத்து வலியுறுத்தியவர். எரியும் பிரச்சினையால் பிளவுபட்டிருக்கும் இந்நாட்டில் இன, மத, மொழி மற்றும் வர்க்க பேதங்களுக்கு எதிராகச் செயற்பட்ட உண்மை மனிதர்களில் ஒருவராக திரு அமரதுங்க விளங்கினார். அவரது அமைப்பு நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது.

www.padippakam.com






# நாட்டை விழுங்கி பிணங்களைத் துப்புகிறது யுத்தம்

18ந் திகதி நள்ளிரவு ஒருமணிக்கு புலிகள் முல்லைத்தீவு முகாமின் மீது பெருந்தாக்குதலை நடாத்திய தன் பின்னர் இனப் பிரச்சினை தொடர்பாக அரசியல் இராணுவச் சமநிலையில் பெருந் தளம்பல் ஏற்பட்டுள்ளது.

1993 பூநகரி நாகதேவன்துறை தாக்குதலின் பின்னர் புலிகளின் குறிப்பிடத்தகுந்த தாக்குதலாக இது கருதப்படுகிறது.

பெரிய படைபலத்துடன் கூடிய முகாம்களின் மீதான தாக்குதலில் இது மூன்றாவதாகும். புலிகளுக்கு வெற்றியாக அமைந்த பூநகரி நாகதேவன்துறை யுத்தம், முல்லைத்தீவு யுத்தம்ஆகியன பெருமளவு தமது உறுப்பினர்களை விலையாகக் கொடுத்த யுத்தங்களுமாகும்.

தற்போதைய யுத்தத்தில் தமது போராளிகள் 210 பேர் தான் உயிரிழந்ததாக புலிகள் குறிப்பிட்டாலும் இத்தொகை அதிகமாக இருக்க சாத்தியங்களுண்டு.

## குளறுபடி அரசியலும் மனிதக் குண்டுகளாகும் சிறுவரும்

ரிவிரச–1, ரிவிரச–2 யாழ்ப்பாணத் தாக்குதல்கள் புலிகளுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருந்தன. புலிகளின் பலம் தொடர்பான கேள்விகள் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் எழுந்தன. புலிகளின் உறுப்பினர்கள் மத்தியில் விரக்தியும் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களும் அதிருப்தியும் தலைதூக்கியிருந்தன.

இவற்றையெல்லாம் நிவர்த்திக்கும் நோக்குடனேயே முல்லைத்தீவுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் நடைபெறுவதற்கு சில வாரங்களுக்குமுன்னர் புலிகளின் எதிர்காலத் தாக்குதல்கள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்ற விவாதம் புலிகளின் உயர்மட்டத்தில் நடத்தப்பட்டது.

'ஆயிரம்பேரை இழந்தாவது பெரியதொரு தாக்குதல் நடவடிக்கையை வடபகுதியில் நடத்த வேண்டும்' என்ற அபிப்பிராயம் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் இருந்தது.

ஆனால், புலிகளின் தலைமைப்பீடத்திலுள்ள வேறுசிலர் தற்போது நடத்திக் கொண்டிருப்பது போன்ற கெரில்லா யுத்தத்தை தொடர்வது, பாரிய தாக்குதல்கள் எவையும் தேவையில்லை என்று அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள்.

எது எப்படியோ தலைவரின் கருத்தே நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதனை ஊர்ஜிதம் செய்வதுபோல் முல்லைத்தீவுத் தாக்குதல் அமைந்துவிட்டது.

ரிவிரச–1, –2, இற்குப் பின் யாழ்குடாநாடு புலிகளின் பிடியிலிருந்து முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு பிரமை அரசு தரப்பில் இருந்தது. ஆனால் அரசின் அத்தகைய எண்ணத்தை கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் யாழ்ப்பாணத்தில் அரசு கைப்பற்றிய பகுதியின் இதயமாக விளங்கும் ஸ்ரான்லி வீதியில் நடைபெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதல் அமைந்தது. அது அரசிற்கு ஒரு இடியான செய்தியாக இருந்தால், முல்லைத்தீவு முகாம் தாக்கப்பட்டது பேரிடியான செய்தியே.

## இடம்பெயர்த்தனர் புலிகள் குடியமர்த்தியது ராணுவம்

இந்த முல்லைத்தீவுத் தளமுகாம் தாக்குதல் புலிகள், அரசு, மக்கள், சர்வதேசம்

## இந்த இனவாத யுத்தத்தில் யாரும் வெற்றிபெறப் போவதில்லை; ஆனால் மக்களின் பேரழிவு மாத்திரம் நிச்சயமானது

ரி. சிறீதரன்

என்ற நிலையில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன என்பது முக்கியமாக ஆராய்ச்சிக்குரியது.

ஏனெனில், யாழ்ப்பாணம் அரச படைகளால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் நடைபெற்றுள்ள மிகப் பெரிய தாக்குதல் நடவடிக்கை இதுவாகும். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு அரசு தனது முப்படைகளினதும் ஆற்றலை முழுமையாக பயன்படுத்தியது. ஏன், ஆற்றலை பிரயோகிக்கும் குவிமையமாக யாழ்ப்பாணம் விளங்கியது.

சரித்திரத்தில் முதல் தடவையாக வலிகாமம் பகுதி மக்கள் வேருடன் இடம்பெயர்க்கப்பட்டார்கள், யுத்தத்தின் கோரப் பிடியிலிருந்து தப்புவதற்கு மக்கள் இடம்பெயர்ந்தார்கள் என்பதனை விட புலிகள் பலவந்தமாக மக்களை இடம்பெயர்த்தார்கள் என்பதே உலகறிந்த உண்மை.

ஆனால் முதல்கட்ட யுத்த நடவடிக்கையில் இடம்பெயர்க்கப்பட்ட மக்களில் பெரும் பகுதியினர் இரண்டாம்கட்ட நடவடிக்கையின் பின்னர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள். அரச இராணுவமே புலிகளின் பிடியிலிருந்து மக்களை விடுவித்த ஒன்றாகியது.

இந்த யுத்த நடவடிக்கையின் ஆரம்பத்தில் புலிகளின் நடைமுறைகளால் வெறுப்பேற்றப்பட்ட மக்கள் சாடைமாடையாக புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக முணுமுணுக்கத் தொடங்கினார்கள்; இறுதிக்கட்டத்திலும் அதன்பின்னரும் புலிகளுக்கெதிராக பகிரங்கமாகவே செயற்படத் தொடங்கினார்கள்.

புலிகள், மக்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றியமை, மக்களின் சக்திக்கு மீறிய அளவில் பணக் கறப்பு, மக்களின் சொத்துக்களை எடுத்துக்கொண்டமை, அவசர அலுவல்களுக்காக தென்னிலங்கைக்குச் செல்வதற்கான பாஸ்அனுமதிகளில் காணப்பட்ட கெடுபிடிகள் மக்களை ஆத்திரமடைய வைத்தன, விரக்தியடைய வைத்தன.

சில இடங்களில் பாஸ் வழங்கும் காரியாலயங்கள் தாக்கப்பட்டுள்ளன; சில இடங்களில் புலிகளின் உறுப்பினர்கள் தாக்கப்பட்டார்கள்; சில இடங்களில் புலிகளுக்கெதிரான சுவரெழுத்துக்கள் தோன்றின.

விரக்தியின் எல்லைக்குச் சென்ற மக்கள் இராணுவம் அங்கிருந்தாலும் பரவாயில்லை சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றுவிடுவோம் என்று கருதினார்கள். ஏறத்தாழ இரண்டரை லட்சம் மக்கள் வலிகாமத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

## போரைத் தவிர வேறு போக்கிடமில்லாதவர்கள்

மக்களின் இந்தச் செயற்பாடு புலிகளால் ஜீரணிக்க முடியாததாயிருந்தது. மக்கள் மீது தமது கோபத்தைக் காட்டித் துண்டுப்பிரசுரம் வெளியிட்டார்கள். மறுபக்கம் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் மத்தியில் பெருகிவரும் அதிருப்தியை தணிப்பதற்காக பாஸ் நடைமுறைகளில் ஓரளவு தளர்வை ஏற்படுத்தினார்கள்.

ஆனால் மக்கள் தான் தமது அரண்கள் என்ற புலிகள், மக்கள் தம்மைவிட்டு விலகுவதையிட்டும், புதிதாக ஆட்களைச் சேர்ப்பது பிரச்சினையாகியதாலும் தமது திறமையை வெளிக்காட்ட விளைந்தார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை தமது ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு யுத்தத்தைத்தவிர வேறு மார்க்கம் கிடையாது. எனவேதான் ஆயிரக்கணக்கான போராளிகள் இறந்தாலும் பரவாயில்லை, ஒரு மாபெரும் தாக்குதலை நடத்திவிடுவோம் என்று துணிந்தார்கள்.

புலிகள் முகாம்களை தாக்குவது வழமையான செயற்பாட்டின் ஒரு அங்கமே எனச் சிலர் கூறலாம். முல்லைத்தீவுத் தாக்குதல் ஒரேயடியாகஅப்படியானதுதான் என்று கூறிவிடமுடியாது. வெலிஓயாவிலிருந்து, முன்னேற்றப்பாய்ச்சல், சூரியக்கதிர் என இழப்புகளையும் பின்னடைவுகளையும் சந்தித்த புலிகளுக்கு, தமக்கு அசுரபலம் இருக்கிறது என்பதனை நிரூபிக்க வேண்டிய தேவை இருந்தது.

## தீர்வுப்பொதி சிறிதாகிறது பிரச்சினையோ பெரிதாகிறது

அரசுக்கு முன்னால் தற்போது பூதாகரப் பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன. புத்தளம் இலவங்குளம் தாக்குதல், யால வன விலங்குகள் சரணாலயத்தினுள் புலிகளின் நடமாட்டம், கொழும்புத் துறைமுகத்தினுள் நடைபெற்ற தாக்குதல்கள், கிழக்கில் சரமாரியாக நடைபெறும் கெரில்லாத்தாக்குதல்கள் பெரும் சவால்களாக உருவெடுத்துள்ளன.

அரசு அதிக விலை செலுத்திக் கைப்பற்றிய யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தறை வரை புலிகளின் தாக்குதல்களுக்கான சாத்தியங்களை மறுத்துவிட முடியாதளவிற்கு நிலைமை பூதாகரமாகியுள்ளது.

கிழக்கில் புலிகளின் செயற்பாடுகள் கெரில்லாப் போராட்ட எல்லைகளைத் தாண்டுகின்ற நிலையில் காணப்படுகின்றன. தொடர்ச்சியான மின் மாற்றிகள் தகர்ப்பு, பஸ்கள் எரிப்பு, என்பன மிகப் பெரிய நெருக்கடிகளை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

மட்டுநகரின் வடபிரதேச கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்ட அலைவேகத் தாக்குதல்களின் பின் வாழைச்சேனை, செங்கலடி ஆகிய இடங்களில் அகதிகள்வெள்ளம் என மக்கள் திரண்டு கொண்டிருக்கிறார்கள். பாரதூரமாக உணவு, சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகி உள்ளன.

ஆனால் முல்லைத்தீவில் புலிகளின் தாக்குதல்கள் அலைவேகத்தை மட்டுப்படுத்திவிட்டதென்றே கூறவேண்டும். யாழ்குடாநாடு புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதன் பின்னர் தமிழர்களுக்குப் பெரிதாகஎதுவும் வழங்கத் தேவையில்லை என்ற கருத்து அரசுக்கு வெளியேயும் உள்ளேயும், பௌத்த துறவிகள் மத்தியிலும் உருவாகியிருக்கிறது.

அதேவேளை, மக்களின் மனங்களையும் இதயங்களையும் வெல்வதென்ற சந்திரிகா அவர்களின் இதயசுத்தியான நோக்கமும் பெரும் ஐயப்பாட்டோடும் கேள்விகளுடனுமேயே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

## போரின் சவால்களுக்கு போரிலில்லை பதில்

சுமார் நாலரை லட்சம் மக்களைக் கொண்ட யாழ்ப்பாணத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை அனுப்புவதிலேயே அரசு பலத்த சிரமங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அரிசி 100ரூபாவிற்கு கறுப்புச் சந்தையில் விற்கப்படும் நிலை நிலவுகிறது. அரசினால் அனுப்பப்படும் அகதிகளுக்கான பங்கீட்டு உலர்உணவு கூட எல்லோருக்கும் கிடைக்கவில்லை.

ஏற்கனவே வடகிழக்கில் யுத்த மேகங்கள் சூழப்பட்ட பகுதிகளில் போசாக்கின்மை, அதனால் வரும் உடல், உள தாக்கங்கள் பாரதூரமானவையாகி இருக்கின்றன. வாகரையில் மட்டக்களப்பு அரச அதிபர், அதிகாரிகள் சகிதம் நடாத்திய ஆய்வுகள் பல திடுக்கிடும் தகவல்களைத் தருகின்றன.

யாழ் குடாநாட்டிற்கு உலர் உணவை அனுப்புவதே பிரம்ம பிரயத்தனமாக இருக்கையில் புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது ஒரு தெளிவான பதிலில்லாத கேள்வியாகவே இருக்கிறது.

முல்லைத்தீவுத் தாக்குதல், தமது பலத்தைக் காட்டுவது என்பது மாத்திரமல்லாமல் புலிகளின் மிகமுக்கிய இராணுவ தந்திரோபாய நடவடிக்கையுமாகும். அதாவது யாழ்ப்பாணத்திலுள்ள படைகளுக்கான விநியோக வழியை மாத்திரமல்ல, மக்களுக்கான விநியோகங்களையும் துண்டிப்பது. இதுவே முக்கிய குறிக்கோள்.

ஏற்கனவே விநியோக நடவடிக்கைகளில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கும் அரசு முல்லைத்தீவு யுத்தத்தின்பின்னர் மிகப் பெரிய சவாலை எதிர்நோக்கி நிற்கிறது.

## ஆபத்தான எதிர்காலமும் அரசுக்குள்ள நிகழ்ச்சி நிரலும்

படைகளின் பிரதானபயணப்பாதை, படைகளுக்கான உணவு விநியோகத்தின் பிரதான மார்க்கம் கிழக்கு கடற்பகுதியாகும். மக்களின் போக்குவரத்து மார்க்கமும் அதுவே. மக்களுக்கான உணவு விநியோகம் மற்றும் அத்தியாவசிய பொருள் விநியோகத்திற்கான பாதையும் அதுவே.

தற்போது யாழ்குடாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளைச் செய்ய தொண்டர் படையொன்றை அரசு திரட்டுகிறது.

இராணுவத்திற்கு ஆள் திரட்டுவதில் அரசு ஏற்கனவே சிரமங்களை எதிர்நோக்கி நிற்கிறது. யாழ் குடாநாட்டுத் தற்கொலைத் தாக்கு

படிப்பகம்

www.padippakam.com



தலும், முல்லைத்தீவுத் தாக்குதலும் அதனை மேலும் கடுமையாக்கியுள்ளது.

ஏற்கனவே உள்ள இராணுவம் யுத்தத்தில் குறியாகச் செயற்படுவதற்கு வசதியாகவும், அவர்கள் சிவில் காரியங்களையும் செய்து கொண்டு படை நடவடிக்கைகளையும் தொடரமுடியாது என்ற சூழ்நிலையிலும், புனர்வாழ்வு புனரைமப்பு பணிகளுக்கென தெற்கிலிருந்து தொண்டர் படை திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இந்தத் தொண்டர் படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பதும் பெரும் ஐயத்திற்கிடமான விடயமாக உள்ளது.

ஏற்கனவே, தரைப்பாதை என்பது திறக்கப்படாமல் விநியோகத்தை மேற்கொள்வதென்பது சிரமசாத்தியமானதென்பது அரச தரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளை யாழ் மக்களுக்கு விளக்கிக் கூறுமாறு அரசு சில தமிழ் புத்திஜீவிகளிடம் விடுத்த கோரிக்கையை அவர்கள் ஏற்கவில்லை. மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் ஜீவாதாரத் தேவைகளை குறைந்தபட்சமேனும் பூர்த்தி செய்யாமல் தீர்வுத் திட்டம் பற்றி அவர்களிடம் எவ்வாறு பேசுவது என்ற கேள்வி புத்திஜீவிகளால் எழுப்பப்பட்டுள்ளது.

அதைவிட, 1994 ஆகஸ்ட் 3 இல் அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகள் இந்த ஒருவருடத்தில் தோல்வியடைந்துவிட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஆக, புனர்வாழ்வு புனரமைப்பு எவ்வாறு மேற்கொள்வது என்பதில் வழிதெரியாதநிலை, தீர்வுத் திட்ட யோசனைகளில் ஏற்பட்டுள்ள தேக்கம், எஞ்சிநிற்கும் யுத்தம் என்பன வடகிழக்கு வாழ் மக்களை வெறுப்படையச் செய்துள்ளன.

## பொருளாதார நெருக்கடி என்னும் பொறிக்குள் நாடு

யுத்தத்தினதும் அதன் சார்புடைய செலவுகளாலும் நாடளாவிய அளவில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வேலை நிறுத்தங்கள் மாறிமாறி ஒரு வட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மின்சார நெருக்கடி, பாண்விலை, போக்குவரத்து கட்டணம் உயர்வு, பால்விலை உயர்வு, கிராமங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி என்பன நாட்டின் சகல பகுதிகளையும் பெரும் பொருளாதார நெருக்கடி என்ற பொறிக்குள் தள்ளியுள்ளது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை 'ரயர் மாலை' போடும் யுகம் முடிந்திருந்தாலும், கடந்த அரசுகாலத்து மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருந்தாலும், கைது, காணாமல் போதல், அச்சுறுத்தல் என்பன தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கென குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், மனித உரிமைகள் பாதுகாப்புக்கென சட்டங்கள் உருவாக்கப்பட்டாலும், குறிப்பாக சிறுபான்மை இனமக்கள் பீதியின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

அவசரகாலச்சட்டமும், ப்யங்கரவாதத் தடைச் சட்டமும் எவ்வாறு மனிதனை உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் வதைக்கும் வேட்கை கொண்டோர்க்கு உதவி புரிகின்றன என்பது முக்கிய கவனத்திற்குரிய விடயமாகும்.

மனித உரிமைகளைப் பற்றி என்னதான் வாய்கிழியப் பேசினாலும், சட்டங்களை உருவாக்கினாலும் நடைமுறையில் அவை ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருக்கின்றன. மனித உரிமைகள் மிதிபட்டுக் கொண்டிருக்கையில் ஜனநாயக நிறுவனங்களை மீள கட்டியெழுப்புவது பற்றிச் சிந்திக்கமுடியாது.

## சிறுபான்மயின மக்கள் சிறுமைக்குள்ளாக்கப்படாமல்...

புலிகளின் மனித வெடிகுண்டுத் தாக்குதல்களின் கோரவடிவம் அதன் எதிர் விம்பங்களை உருவாக்குகிறது என்பது உண்மையே. ஆனால் பொறுப்புள்ள அரசு என்ன செய்ய வேண்டும் என்பது முக்கியமானது.

இந்நாட்டில் ஜனநாயகம் தொடர்பான மிகமுக்கிய பிரச்சினையான இனங்களின் சுதந்திரம் என்பது தொடர்பான கண்ணோட்டத்தில் தெளிவிருக்குமானால் மற்றைய விடயங்களைத் தீர்ப்பது ஒன்றும் பெரிய பிரச்சினை அல்ல.


எண்ணிக்கையில் சிறுபான்மை தேசிய இனம், இனங்களின் மனவோட்டத்தில் தாம் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடாத்தப்படவில்லை என்ற அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு நடைமுறையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்ன என்பதே இங்கு முக்கியமான கேள்வியாகும்.

எந்தளவுக்கு எந்தளவு பேரினவாத அமைப்பு இறுக்கமானதாகிறதோ, அமைப்பு ரீதியானதாகிறதோ அந்தளவுக்கு குறுந்தேசியவாதமும் தன்னை இறுக்கிக் கொள்ளும். எனவே இனவாத சக்திகள் நிறுவனமயப்படுவதை தடுக்காமல் அவற்றுக்கெதிராக செயற்படாமல் இங்கு இனப்பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கவும் முடியாது; இந்தநாட்டு மக்கள் இனவாத யுத்தத்தில் பேரழிவுகளை எதிர்நோக்குவதையும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

இந்த இனவாத யுத்தத்தில் யாரும் வெற்றி பெறப் போவதில்லை. ஆனால் மக்களின் பேரழிவு மாத்திரம் நிச்சயமானது.

## குண்டுவிழும் வீதமும் துண்டுவிழும் தொகையும்

மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதம் இந்த யுத்த யந்திரத்திற்காகச் செலவிடப்படுகிறது. எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை 10சதவீதமாக அதிகரிக்கும் சாத்தியங்கள் உண்டு. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் யாழ் குடாநாட்டில் எவ்வாறு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறீர்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளன.




உல்லாசப் பிரயாணத்துறை உள்ளிட்ட வெளிநாட்டுமுதலீடுக்ள் சம்பந்தப்பட்ட பல தொழில் துறைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன.

புலிகளின் நீடித்த யுத்த நிலையும், புலிகளின் பொருளாதார மையங்கள்மீதான பயங்கரவாதத் தாக்குதல்களும், கொழும்பில் கண்டுபிடிக்கப்படும் வெடிமருந்துகளும் தற்கொலைக் குண்டுதாரிகளும் கொழும்பை ஒரு போர்க்கோலம் பூண்ட நகரமாக மாற்றியுள்ளது. இதன் விளைவாக சோதனைகளும் கைதுகளும் அத்துமீறல்களும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பெரும் பீதியை உருவாக்கியுள்ளது.

தமிழ்ச் சமூகத்தில் ஒரு கணிசமான பகுதியினர் இந்த நாட்டை விட்டு வெளியேறிவிட விரும்புகிறார்கள் என்பது ஒரு ஜீரணிக்க முடியாத உண்மையுமாகும்.

## யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு எதிர்காலத்தைக் காப்பாற்றும் திராணியுள்ள முடிவு வேண்டும்

யுத்தம், கூர்மைப்பட்டுவிட்ட இனமுரண்பாடு, பொருளாதார நெருக்கடி என்பன இந்த நாட்டை விழுங்கி ஏப்பம்விட்டுவிடுமோ என்று அஞ்சும் அளவிற்குச் சென்றுள்ளன.

எனவே, தீவிரமாகச் சிந்தித்து உடனடியாக புத்திசாதுரியத்தோடு செயற்படவேண்டிய காலமிது. உள்ளார்ந்த அளவில் அழிவுகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு இலங்கையில் அரசியல் இராணுவ சக்திகள் சென்றுள்ளன.

உண்மையில் இந்த நாட்டில் யுத்தத்தை வெறுக்கும், மனித உரிமைகளை நேசிக்கும், ஜனநாயகத்தை மதிக்கும், இன ஐக்கியத்தை கனவுகாணும் சக்திகள் ஐக்கியப்படுவது முதலாவது வேலைத்திட்டமாகும்.

பேச்சு, எழுத்து, செயல் ஆகிய மூன்று வழிகளிலும் இந்த உயர்ந்த இலட்சியங்களுக்கெதிரான – நாட்டைக் குட்டிச்சுவராக்க நினைக்கும் சக்திகளுக்கெதிராக போராடுவது இரண்டாவது வேலைத்திட்டமாகும்.

மக்களை விழிப்படையச் செய்வதற்கான கலை கலாச்சார நடவடிக்கைகளும் இதனுள் அடங்கும். தவிர இலங்கையின் உள்ளாற்றல் இழப்பை ஈடு செய்யும் வகையில் சர்வதேச தலையீடு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்துவது இவை எல்லாவற்றிலும் மிக முக்கியமான விடயமாகும். ●

---

# உளறு வாயன்



"என்னைப் பற்றியே நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால் பேச வேண்டிய சந்தர்ப்பத்தில் பேசாமல் இருப்பது வெறும் போலிப் பணிவு..."

– 'வாக்குமூலம்' நாவலில்.

கதைக்கக் கன கதையள் கிடக்கு. ஒரு லிமிற்றுக்கை நிப்பாட்ட வேணுமெண்டது எனக்கு எப்பவும் சோதினைதான்.

இதுக்கு நானொரு உபாயம்.... ம். இவன்ர கதையைக் கேக்கிறதுக்கு முந்தி இந்த ஆலாபனையளைத் தாங்கிறதுதான் வலு கஷ்டம் எண்டு நேரிலை கண்டு கதைக்கிறவையும் குற்றம் சாட்டுகினம். நேரை விஷயத்துக்கு வாறேல்லை, சுத்திச் சுழண்டு நேரத்தை விழுங்கிப் போடுவான் எண்டுதான் பழி எனக்கு மேலை. ஒரு அலுவலைச் சொல்லத் தொடங்கிறதுக்கு முந்தி அடிமானங்கள் போட்டு மினக்கெடுறதை பெரிய கட்டிடங்கள் எழுப்புறதுக்கு அத்திவாரம் போடுற தோடைதான் ஒப்பிட வேணும். ஆனாலும் நான் அடக்கத்தோடை சொல்லுற பதில்: "முயல் கெதியாய் குட்டி போட்டுடும், யானை அப்பிடியில்லை" எண்டதுதான்.

விசயத்துக்கு வாறன். இந்த நாடு ஒரு செங்குத்துப் பாறை முனைக்குப் போய்க் கொண்டிருக்கிறதாயும், விழுந்து உடையிறதை நிப்பாட்டேலாமல்தான் வரும் எண்டும் காணுறவை கதைக்கிறவை எல்லாம் சொல்லுகினம். யுத்தத்தை நிப்பாட்டேலாமலும் கிடக்கு, வைச்ச தீர்வை அதுக்கு மேலை அரக்கேலாமலும் கிடக்கு. போனவருசம் வைச்ச தீர்வு தேய்ஞ்சு தேய்ஞ்சு குரங்கு புறிச்ச அப்பம் கணக்கில போகுது. சரி, கிடாரம் உடைஞ்சால் கிண்ணியாவது மிஞ்சாதா எண்டு பாத்தால், அதுகுமில்லை நாட்டை அழிச்சே தீரவேணுமெண்டதிலை எதிர்க்கட்சிக்காறரும் கொடுக்கை இழுத்துக் கட்டி நிக்கினம்.

நாடே தற்கொலைக் குண்டைக் கட்டிக் கொண்டு நிக்கிற மாதிரித்தான் எல்லாப் பக்கத்தாலை வாற செய்தியளும் அடி வயித்தில புளியைக்கரைக்குது. முல்லைத் தீவுக் கடலாலை கப்பல் போகேலாது. கிளிநொச்சிப் பக்கமிருந்து வவுனியா வந்த சனத்தைக் கண்டு கதைச்சால் கண்ணீர்தான் விடவேணும். சனத்திட்டைக் காசிருந்தாலும் கஞ்சிக்கு அரிசியில்லை, எண்ணெயில்லை, கறி புளி உப்பில்லை எண்டு சனம் அழுதுகுழறித்தான் வருது.

வடக்குக்குச் சாப்பாடனுப்ப வழியில்லை. கிளிநொச்சி வவுனியாவுக்கு இடையிலை கண்டி றோட்டைத் திறந்தால்தான் வழியெண்டு, ராணுவமும் தற்கொலை யுத்தத்தில இறங்கியிருக்கிற மாதிரித்தான் தெரியுது. எல்லாம் கௌரவப் பிரச்சினைதான்.

பட்ஜெட், பங்கை 'பட்சொட்' விழுந்த மாதிரித்தான் இந்தமுறை தலையில இறங்கப் போகுது. வில்லண்டமெண்டு சொல்லி வெளிநாட்டுக்காறரிட்டை உதவி கேக்க வெக்கம் விடுகுதில்லைப் போல கிடக்கு. தொடர்ந்து சனத்தை அழிச்சுக் கொண்டிராமல், இதை நிப்பாட்டுறதுக்கு மனப்பூர்வமாய் யோசிச்சால், வறட்டு வீரப் பிரதாபங்களை விட்டிட்டு எதார்த்தமாய் என்ன செய்ய வேணுமெண்டது வெளிக்கும். இல்லை, இன்னும் மூண்டு வருசம் தாக்காட்டுறதுதான் விசயம் எண்டு நினைச்சால், நம்பிக்கெட்ட பெருமூச் சொண்டைத்தான் நானும் விடவேணும். இதுக்குள்ள எதிர்க்கட்சிக்காறர் சொல்லுறாராம். இவவோட ஒண்டும் கதைச்சுப் பேசிச் செய்துமுடிக்கேலாது. அடுத்த முறை நான் வந்தனெண்டால் இதை நல்லபடி தீர்த்து வைப்பன் எண்டு தூண்டில் போடத் தொடங்கியிருக்கிறாராம். பேந்தென்ன? வட்டுக்கோட்டையும் கொட்டைப் பாக்கும்தான்.

அதொருபக்கமிருக்க, மூண்டாவது சக்தி தலையிட வேணுமெண்டதை இப்ப எல்லாரும் எடுத்துவிடத் தொடங்கியிருக்கினம். ஆனால் சொல்லுற ஆக்களின்ர நோக்கங்கள்தான் வேறவேறயாக் கிடக்கு. இதில முசுப்பாத்தி என்னெண்டால், இந்திய–இலங்கை ஒப்பந்த நேரத்தில குய்யோமுறையோ எண்டு கூக்குரலிட்டவை எல்லாம் இப்ப இந்தியாவுக்கு இதில ஒரு கடமை இருக்கெண்டு புது நோடாலம் விடுகினம். சாதாரண சிங்கள நண்பர்களும் "இந்தியா வராதோ?" எண்டு கேக்கினம்.

சனம் இண்டைக்குக் கேக்கிறது வேறை. தலைவர்களும், வழிநடத்துற பத்திரிகைக் காறரும் எப்பவும் சனத்துக்கு முன்னால கொஞ்சம் யோசிக்க வேண்டாமோ? வந்து நிக்கேக்க பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் ஆயிரத்தெட்டு நொண்ணை பறைஞ்சு திருப்பியனுப்பிப் போட்டு, இப்ப தார்மீகக்கடமை தாவடிக்கடமை எண்டு மூக்கையுறிஞ்சி என்ன புண்ணியம்? பிரச்சினையைப் புரிஞ்சுகொள்ளுறதும், குறைஞ்ச அழிவுகளோடை இதைத் தீர்த்துப்போட வழிகண்டு கொள்ளுறதும், செய்துமுடிக்கிறதுக்கான திராணியும்தான் மக்களுக்கு வேலை செய்யிறம் எண்டு சொல்லுறவைக்குத் தேவை – அவை அரசாங்கத்தை நடத்துறவையாய் இருந்தாலும் சரி, பேப்பரில எழுதிப் பேசுறவையாய் இருந்தாலும் சரி. இதுகளையெல்லாம் நான் கூவி எங்கை விடியப் போகுது?..ம்..

இந்தச் சின்ன நாட்டுக்குள்ள நடக்கிற அநியாய அழிவுகளை நிப்பாட்டுறதுக்கு இந்தியாவோ இங்கிலாந்தோ அமெரிக்காவோ ஐரோப்பாவோ ஆரிட்டை எண்டாலும் உதவச் சொல்லிக் கேக்கிறதில என்ன வெக்கம்? இதுதான் எனக்கு விளங்கேல்லை... 'ஏதோ மற்றதெல்லாம் உனக்கு விளங்கினமாதிரி' எண்டு லொள்ளுப் பண்ணாதேங்கோ. யோசியுங்கோ. பிறகு பாப்பம். வாறன்.

உளறுவாயன்
தர்ம நியாயங்கள்
யாருக்கு
இங்கே புரியப் போகிறது?



www.padippakam.com





# புலிகளின் சர்வதேச செயற்பாடுகள் பற்றி

## 'ஏசியா வீக்' சஞ்சிகை ஜீலை 26 இதழிலிருந்து

பல்வேறு நாடுகளிலுமுள்ள புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பல்வேறு காரணங்களுக்காக எல்.ரி.ரி.ஈ. இற்கு பணம் கொடுத்தார்கள் அல்லது கொடுக்கிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தனிநாடு ஒன்றே நீண்டகால அடிப்படையில் தீர்வைத் தரும் என்ற புலிகளின் விளக்கத்தை சிலர் நம்புவது ஓர் காரணம். கடந்தகாலங்களின் போர்களும் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களும் இத்தகைய பார்வையை வலுவூட்டுவதாக உள்ளது.

இன்னோர் பகுதியினர், சட்டவிரோதமாக வெளிநாடு செல்பவர்கள் அல்லது அரசியல் சரண் கேட்பவர்கள். அந்நியமான ஓர் சமுதாயத்தில் இவர்களின் இருப்புக்கு புலிகளின் சண்டை அவசியமாக இருக்கிறது. அதனால் தமது இருப்பை உத்தரவாதப்படுத்த புலிகளுக்குப் பணம் கொடுக்கிறார்கள்.

இன்னோர் வகையினர் பயத்தினால் பணம் கொடுக்கின்றனர். இப் பயம், ஒன்றில் தாம் புலிகளால் தாக்கப்படவோ பழிவாங்கப்படவோ கூடும் என்பது; இன்னொன்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் குறிப்பாக வட இலங்கையில் வாழும் தனது குடும்ப உறுப்பினர்களோ உறவினர்களோ பழிவாங்கப்படுவார்கள் என்ற பயம் ஆகும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வெளிநாட்டிலுள்ளோரின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர்கள் வாழ்வதென்பது, புலிகளின் பணம் சேர்க்கும் நோக்கத்திற்கு மிகுந்த உற்சாகம் தரும் ஓர் விடயமாகும். பெரும்பாலும் நிதி சேகரிப்பு என்பது ஏதோ ஓர்வகை மிரட்டலின் அடிப்படையிலேயே நடக்கிறது. ஒருவர் பணம் கொடுக்க மறுத்தால் "எங்களுக்குத் தெரியும், உன்னுடைய அம்மா யாழ்ப்பாணத்தில்தானே இருக்கிறா. அதனால் பணத்தைக்கொடு" என்ற வகையில் மிரட்டப்படுகின்றனர்.

சுவிற்சலாந்தில் புலிகளின் நிதி சேகரிப்பின் ஓர்பகுதி மிரட்டிப் பணியவைத்து கப்பம் பெறும் வகையிலேயே நடைபெறுகிறது. ஓர் புலி உறுப்பினர் கூறுகையில், சுவிற்சலாந்தில் நயமாகப் பேசிப் பணிய வைப்பதன் மூலம் 40–80டொலர் வரை மாதாந்தம் ஒருவர் பங்களிக்கிறார் என்கிறார். பல கொலைகள் உட்பட திடீரென அதிகரித்த வன்முறைச் சம்பவங்களை அடுத்து, ஏப்ரல்10ம் திகதி அதிகாலை நாடு தழுவிய வகையில் சுவிஸ் காவல்துறையினர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். இதில் சுவிற்சலாந்தின் புலிகள் இயக்க பொறுப்பாளர் நடராஜா முரளீதரன் உட்பட 15 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள்மீது கப்பம் வசூலித்ததாகவும், வன்முறை மிரட்டல்கள் விடுத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

"முன்னரும் தமிழ் மக்களிடமிருந்து புலிகளின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் வந்தபோதும் பகிரங்கமாக சாட்சி சொல்ல எவரும் முன்வரவில்லை.ஆனால் தற்போது இந்நிலைமை மாறி வருவதாகத் தோன்றுகின்றது" என சுவிஸ் காவல்துறை அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

இவ்வகை நேரடி நிதி சேகரிப்பு தவிர, புலிகளின் நிதி சேகரிப்பாளர்கள், தமிழ்மக்களின் சிறுசிறு வியாபாரங்களில் முதலீடு செய்வதன் மூலமும் நிதியைப் பெறுகின்றனர். பெரும்பாலும் பினாமி முதலாளிகளைப் பயன்படுத்தும் முறையைப் பின்பற்றுகின்றனர். இவ்வகையில் புலிகள் இன்னொரு நபரின் பேரில் ஆரம்ப முதலீடுகளைச் செய்துவிட்டு. இலாபத்தை தமக்கும் போலி முதலாளிக்கும் பகிர்ந்து கொள்ளும் முறையினைக் கையாள்கின்றனர். இவ்வகை நடவடிக்கைகள் தமிழ் நாட்டில் நடத்தப்படுகின்றன."அரசு இவற்றுக்கெதிராக நடவடிக்கைகளை எடுத்தபோதும் அவர்கள் இப்போதும் நிதி ரீதியாக நன்றாகச் செயற்படுகிறார்கள்" என ஓர் அரசியல்வாதி குறிப்பிட்டார்.

புலிகளின் வசூல் அண்ணளவாக, சுவிற்சலாந்தில் மாதாந்தம் 6,60,000 டொலர்களாகும். கனடாவின் ஆசியா குற்ற நடவடிக்கைப் படையின் கணிப்பீட்டின்படி புலிகள் மாதாந்தம் 7,30,000 டொலர்களை உறிஞ்சுவதாகக் குறிப்பிடுகிறது. பிரிட்டனைப் பொறுத்த வரை 3,90,000 டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதென இலங்கையின் ஆய்வாளரான ரோகான் குணரட்ண தெரிவிக்கிறார். ஏறத்தாழ 2 மில்லியன்டொலர்கள் மாதம் வெளிநாட்டிலிருந்து பெறுகின்றனர். இவ்வருடம் அவர்களது வசூலின் 60 சதவிகிதம் வெளிநாட்டுத் தமிழரிடம் இருந்து பெறப்பட்டது என்கிறார்.

புலிகளின் நிதி சேகரிப்பு விடயத்தில் தவிர்க்கமுடியாமல் தர்க்கத்திற்குரிய விடயமாக போதைவஸ்து கடத்தல் குற்றச்சாட்டுக்களும் உண்டு. கொழும்பு அரசுக்கும் புலிகட்கும் இடையிலான கடும் பிரச்சாரப் போரில், ஆசிய போதைவஸ்து (ஹெரோயின்) வர்த்தகத்தில் பெரும்பகுதியை புலிகளேசெய்கின்றனர் எனத் தயக்கமின்றிக் கூறுகின்றனர். "ஹெரோயின் வியாபாரத்தில் கிடைக்கும் பணத்துடன் ஒப்பிடுகையில் புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து வசூலிக்கும் தொகை மிகக் குறைவானதே" என உறுதியாகக் கூறுகிறார் ஓர் இலங்கை ராஜதந்திரி.

வேறுசில ஆய்வாளர்கள் இதுபற்றிக் குறிப்பிடும்போது, சர்வதேச போதைவஸ்துக் கோஷ்டிக்கும் ஆயுதக் கடத்தல் கோஷ்டிக்கும் நெருக்கமாக உறுதியான உறவுள்ளதெனச் சுட்டிக்காட்டுகிறார்கள். "இப்பிராந்தியத்தில் மிக வேகமாகவும், சுலபமாகவும் பணம் பண்ணக்கூடியது போதை வஸ்துவினால்தான்" எனக் குறிப்பிடுகிறார் பாங்கொக்கிலிருந்து செயற்படும் வர்த்தக ஆய்வாளர் ஒருவர்.

மேலும், புலிகளின் போக்குவரத்து வலைப்பின்னல் இதற்கு மிக வாய்ப்பான நிலையில் அவர்களை வைத்துள்ளது என்றும், பர்மாவின் மியான்மாரிலுள்ள முன்னணி போதைவஸ்து வர்த்தகர்களுடனும்; இராணுவ உயர் அதிகாரிகளுடனும் புலிகளுக்கு தொடர்பிருப்பதையும் இதே ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின்றார்.....

இலங்கையில்நடைபெறும் போர் தொடர்பான சர்வதேச கண்ணோட்டம் சந்தேகத்திற்கிடமின்றி மாறிவிட்டது. ஓர்வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் விடுதலை தொடர்பாக அதனுடைய சமரசத்திற்கிடமற்ற கொள்கையும், பனிப்போரின் உச்ச காலகட்டத்திலேயே வளர்ச்சி பெற்றது, ஆனால் சர்வதேச அரசியற் சூழ்நிலை மாற்றம் இவற்றைப் பின்தள்ளிவிட்டது. குறிப்பாக பெருமளவு தமிழ் மக்கள் வாழும் பகுதிகளைக்கொண்ட கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் பார்வையும் கணிசமாக மாறிவிட்டது.

ஓர் மேற்கத்திய ராஜதந்திரி குறிப்பிடுகையில், "கனடாவும் அவுஸ்திரேலியாவும் பெருமளவு தமிழர் வாழும் பகுதிகளைக் கொண்ட நாடுகளாகும். கடந்த காலங்களில் இவை ஆதரவளித்து வந்தன, அல்லது குறைந்தபட்சம் நடுநிலையாக இருந்தன. ஆனால் இந்நிலைஇன்று திட்டவட்டமாக மாறிவிட்டது என்றார். இந்த மாற்றத்திற்கு புலிகள் தமக்குத் தாமே நன்றி சொல்லிக் கொள்ள வேண்டும்.

புலிகளைப் பயங்கரவாதிகள் என இலங்கை அரசு வகைப்படுத்துவது எல்லா நாடுகளுக்கும் பிடித்தமானதாக இல்லாவிட்டாலும், புலிகளின் அன்றாட நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தின் இதயங்களை வெல்வதற்கு எவ்வகையிலும் உதவவில்லை. ராஜிவ்காந்தியின் கொலை பிரபாகரனின் மாபெரும் முட்டாள்தனமான தவறு என்றால் 95 ஏப்ரல் 19ம் திகதி முரட்டுத்தனமாக அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பியது கண்டிப்பாக அடுத்த மாபெரும் முட்டாள்தனமான தவறாகும்.

உலகம் முழுவதும் தொலைக் காட்சியில் காட்டப்பட்ட பெரும்படுகொலையான இலங்கை மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு, சர்வதேச அனுதாபத்தைப் பெறும் போராட்டத்தில் வர்ணிக்க முடியாத மிகப் பெரும் தவறாகும்.

இவற்றின் விளைவாக இலங்கை அரசின் தமிழ் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் ராஜதந்திரரீதியிலான தாக்குதல்களை பல நாடுகள் வரவேற்பதுடன், இவ் வரவேற்பு அதிகரித்தும் வருகின்றது. இவ்வருட ஆரம்பத்தில் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் புலிகளுக்கு ஆதரவாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து இத்தகைய புலிகட்கு சார்பான நடவடிக்கைகள் அனைத்தையும் மலேசியா அரசு தடைசெய்துள்ளதுடன் இதில் செயற்படும் வெளிநாட்டு அமைப்பாளர்களின் விசாக்களும் ரத்துச் செய்யப்படும் என்ற நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையர்கள் விசா பெறுவதற்கு பிலிப்பைன்ஸ் புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் புலிகள் இப்போதும் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும்.

அவுஸ்திரேலியாவில் புலிகள் ஆதரவு "தமிழர் அமைப்பு" ஒன்று ஒழுங்கு செய்த பெரிய கருத்தரங்கொன்றில் அவுஸ்திரேலிய அதிகாரிகள் புலிகட்கு முதுகைக் காட்டிவிட்டனர் என்பதும், இதில் திலகரும் உரையாற்றினார் என்பதும் முக்கியமான மாற்றமாகும்.


வெளிநாட்டில் பரந்துவாழும் இலங்கைத்தமிழரின் ஆதரவை புலிகள் இழந்துவிடக்கூடும் என கூறும் அரசியல் ஆய்வாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகிறது.

முன்னர் போராளியாக இருந்து அரசியல்வாதியான சங்கர் ராஜி இதுபற்றிக் கூறும்போது, "புலிகளின் கிளைப் பின்னலமைப்புக்கள் இன்னும் தாக்கமானதாகவே உள்ளது. ஆனால் முன்னரைவிட தமிழ் மக்களின் ஆதரவு குறைந்தே வருகின்றது. போருக்குள் இருந்து வெளிநாடு சென்ற இளைஞர்கள் ஓரளவு ஆதரவளிக்கக்கூடும். ஆனால் முதிர்ந்த தொழிற்துறையாளர்ளைப் பொறுத்தவரை சர்வதேசக் கண்ணோட்டமே செல்வாக்கைச் செலுத்துகிறது எனக் குறிப்பிட்டார்.


70ம் ஆண்டுகளின் கனவுலகிலிருந்து வெளியே வந்துவிட்ட, மாறிவரும் இன்றைய உலகுடன் தம்மையும் இணைத்துக்கொள்ளக்கூடிய வகையில், புலி தன் முதுகுக் கோடுகளை மாற்றுமா? அல்லது உயர்ந்து வரும் இராணுவ, ராஜதந்திர தோல்விகட்கெதிராக போரைத் தொடர்வார்களா? தமது அடிப்படை நோக்கத்திற்கு முரணாக எவ்வாறு மாறுவது என்பதே புலிகளின் அடிப்படைக் குழப்பமாகும்.

பிரபாகரனின் வளைந்து கொடுக்காத இராணுவ நோக்கு, முன்னர் அவர்களின் பெரிய சொத்தாக இருந்தது. ஆனால் அதுவே இன்று அவர்கட்கு சுமையாகவும் உள்ளது. அவர்களது சமரசத்திற்கிடமற்ற தியாகம் பெரும்பாலும் ஓர் மதவெறி போல் மாறிவிட்டது. இதன் மத்தியில் ஏகாதிபதியாக இருக்கும் பிரபாகரனால் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட ஜனநாயக ஆட்சிமுறையின் கீழ் அமைதியான ஓர் மனிதனாக வாழ முடியுமா என்பது சந்தேகமே. இவ் விடயத்தில் இன்றுவரையான அவர்கள் பற்றிய ஆதாரங்கள் நம்பிக்கை தருவனவாகவே இல்லை. ●

**THE LTTE'S GLOBAL LINKS**



- The LTTE draws support from an expatriate Sri Lankan Tamil community larger than 450,000.
- The Tigers' main sources of income outside South Asia are Tamils in Switzerland, Britain, Australia and Italy.
- Altogether, the Tigers have offices in 38 nations, drawing an estimated $2 million a month.
- The Paris-based World Tamil Movement is the main pro-LTTE global group. The LTTE's International Secretariat is in London.



SUPREMO Can Prabhakaran talk peace?

# ஜெர்மனியிலிருந்து....



இம்முறையும் புதிய கணணோட்டம் நன்றாக அமைந்துள்ளது.
வாசகர்களுக்கான பகுதியையும் ஆரம்பித்திருப்பது நல்லது. கண்ணோட்டம் பலருடைய கருத்துக்களுக்கும் களமாக அமைவது வரவேற்கத் தக்கது. மஞ்சரி பற்றிய விமர்சனம் நன்று.
வெளிநாட்டில் பத்திரிகைகள் செய்யும் குத்துக்கரணங்கள் மிகவும் அழகாக கூறப்பட்டுள்ளது.
இவ்வாறு உடனுக்குடன் சரியான கண்ணோட்டங்களை வழங்க புதிய கண்ணோட்டம் ஏன் ஒவ்வொரு வாரமும் வரக் கூடாது என்று ஏங்குகின்றேன். வாரப் பத்திரிகையாக வர ஆவன செய்வீர்களா?
இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழ் பேசும் இனங்களின் பிரச்சினைகளுக்காவும் உரிமைகளுக்காகவும் போராடியவர்கள், வாதிட்டவர்கள் என்ற வகையில் தன்நலம் கருதாது பாடுபட்ட ஒரே ஒரு தலைமை தோழர் நாபாவினுடையது. ஆனால் அதை தமிழ் மக்கள் உணரத் தவறியதால் இன்று சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கிறார்கள். இன்றும் தமிழ் பேசும் மக்களின் அனுபவம் வாய்ந்த அரசியல் தலைமைகளும் ஆயுத பலமிக்க தலைமைகளும் செய்யத் தவறியதை, ஒரு குறைந்தபட்ச ஆரம்பமாகவேனும் தொடங்கியிருக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த ஒற்றுமை உணர்வும் விட்டுக்கொடுப்புகளும் கட்டிக் காக்கப்பட, சரியான போக்குகளை இனங்கண்டு பலப்படுத்த தமிழ் மக்கள் முன்வரவேண்டும். இதைத் தமிழ் மக்கள் செய்தால் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் வெகு விரைவில் முடிவுக்கு வரும்.

அன்புடன்,
அ. வேலாயுதம், ஜெர்மனி.

www.padippakam.com



## ஊஞலைத்தியார்



### எக்காலத்துக்கும் பொருந்தும் புலிகளின் தத்துவம்

பேச்சை முடித்துக் கொள்வது என்பதன் அர்த்தம் இனிமேல் புலிகள் இயக்கம் பேச்சுக்கு தயாரில்லை என்பதோ அல்லது பேச்சுவார்த்தைக்கு புலிகள் இயக்கம் எதிரானது என்பதோ அல்ல.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு எதிரிகளல்லர். அதுபோல பயனற்ற பேச்சுவார்த்தைகளுக்கு நண்பர்களுமல்லர்.

**– விடுதலைப் புலிகள் (16.06.96)**

**சபாஷ்! எந்தப் பேச்சுவார்த்தையையும் எப்பவும் நீங்கள் முடித்துக் கொள்ளலாம். ஏனென்றால் நீங்கள் அடுத்த பேச்சுவார்த்தைக்கு தயாராத்தானே இருக்கிறீங்கள்.**

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கதவை அரசாங்கம் முற்றாக மூடிவிடவில்லை. விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுடன் பேசுவதால் பயன் கிட்டிவிடாது என்பதையும் நாமறிவோம்.

விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடம் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்று அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரியவில்லை.

**– ஜீ. எல். பீரிஸ். (வீரகேசரி 01.08.96)**

**அப்படி என்றால் கதவை நீங்கள் முழுக்க திறக்க வேண்டியதில்லை என்று சொல்லுங்க.**

### விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த அனைவரும் மாமனிதர்களே!

எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள்; கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது. என்றுதான் சொல்வேன்.

இலைமறைகாயாக இருந்த விடுதலைப் போராட்டத்துக்கு தோள் கொடுத்தவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும், அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்க வேண்டும். நீண்ட காலமாகவே போராட்டத்தில் பெரும்பழுவைப் பொது மக்களே சுமந்து கொண்டிருக்கிறார்கள். சாவும், அழிவும், பசியும் பட்டினியும், இரத்தமும் கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்திரிக்க முடியாது.

## "உங்களுக்கு சிரிப்பதற்கும் பேசுவதற்கும் நேரமில்லை என்றால் நீங்கள் கட்டாயம் தவறாக வாழ்ந்து வருகிறீர்கள்"

**– அலெக்ஸாண்டர்**

உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குதிப்பது பொதுசனங்களே. ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட, பொது மக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில் தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிப்பதில்லை.

மக்களின் விடுதலை உணர்வை அடக்கு முறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது. ஏனென்றால், விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

**– விடுதலைப் புலிகளின் தலைவர் சொன்னதாக 'சுதந்திரப் பறவைகள்' என்ற புலிகளின் பத்திரிகை.**

**தலைவர் அவர்களே! நீங்கள் கூறுவதை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது என்பதை இலங்கை அரசு மட்டுமல்ல நீங்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.**

**உலக வரலாறு பகரும் உண்மையை நீங்கள் புரிந்து கொண்டால் தமிழ் மக்களின் துன்பங்கள் அப்போதே விலகிவிடும்.**

### பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

குண்டுவெடிப்பினால் அப்பாவிப் பொதுமக்கள் பலர் உயிரிழந்தும் காயமடைந்தும் ஏற்பட்டுள்ள அவலம் குறித்து தமிழர் விடுதலைக்கூட்டணி அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றது.

இத்தகைய புலனுணர்வற்ற கொலைகள் எந்த நோக்கத்துக்குத்தான் உதவப் போகின்றது என்பதை எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அப்பாவிக் குடிமக்களுக்கு எதிரான இத்தகைய வன்முறைகளை நாம் கடுமையாக கண்டனம் செய்கிறோம். குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுடனும் எமது கவலையை பகிர்ந்து கொள்கிறோம்.

**– தமிழர் விடுதலைக்கூட்டணி வீரகேசரி (26.07.96)**

தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பையடுத்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, மற்றும் தெஹிவளைப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதியிடம் முறையிட்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற குழுவின் தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் நேற்று முன்தினம் கைதான அப்பாவிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**– வீரகேசரி (26.07.96)**

### "எனது தேசியக் கடமையை நிறைவேற்ற ஆயுதம் ஏந்த முடிவெடுத்தேன்"

### – போராட்டத்தில் இணைந்த மாணவன்.

நாட்டை வளம்படுத்தவும், போராட்டத்திற்குப் பயன்படவும் எப்படியாவது கல்வியைத் தொடர்ந்தேயாக வேண்டும் என நினைத்தேன். ஆனால் இன்றைய நிலையோ படித்தும் பயனில்லை என்ற உண்மையை உணர்த்துகிறது. படிப்பை தொடரவோ பரீட்சையை எழுதவோ, ஏற்ற சூழ்நிலை இல்லை. இந்த நிலையில் வீணாகக் காலம் கடத்தவோ, படையினரின் தாக்குதலில் அப்பாவியாக உயிரிழக்கவோ விரும்பவில்லை. அதனாலேயே எனக்கான தேசியக் கடமை ஆயுதம் தூக்கி போராடுவதினூடாக நிறைவேற்ற முடிவெடுத்தேன். நான் இயக்கத்தில் சேரவந்தபோது, என்னுடன் கல்வி பயிலும் எனது இரு நண்பர்களும் அதே முடிவை எடுத்துள்ளனர்.

இவ்வாறு கிளிநொச்சி சயன்ஸ் அக்கடமி என்ற தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்றுவரும் கிருஷ்ணபிள்ளை மணிவண்ணன் (வயது 19) என்ற இளைஞர் தெரிவித்துள்ளார்.

**– ஈழநாதம் (05.06.96)**

### "தமிழீழ மாணவர்களின் கல்வியை முன்னெடுத்து செல்ல உதவுக"

### – கல்வி மேம்பாட்டு பேரவை கோரிக்கை.

வன்னி நிலப்பரப்பில் உள்ள கல்வி நிலையை ஏனைய பகுதிகளுக்கு நிகராகக் கொண்டுவர வேண்டும் என்ற பேரவாவோடு கல்வி கற்பிக்கும் தகுதியும் ஆற்றலும் உள்ள இளைஞர்களைத் தேர்ந்து கல்விக்கழக ஆசிரியர்களாகத் தமிழீழக் கல்விக் கழகம் அமர்த்தியது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழக ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் பல இலட்சக்கணக்கான ரூபாய் பணத்தையும் கல்விக் கழகம் வழங்கி வருகிறது.

சிறிலங்கா அரசினதும் சிங்கள இராணுவத்தினதும் நடவடிக்கைகளால் ஏற்பட்ட நெருக்கடியை தொடர்ந்து கல்விக் கழக ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியாத நெருக்கடியான நிலை கல்விக்கழகத்திற்கு ஏற்பட்டது. இதனால் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டன. வன்னி பெருநிலப்பரப்பில் கழக ஆசிரியர்களுடைய பணி இப்பகுதி மாணவர்களின் கல்வி நிலை பெருவீழ்ச்சி அடையாமல் பாதுகாத்து வந்துள்ளது. இவர்களுடைய பணி நிறுத்தப்பட்டால் நாம் இரண்டு வகையான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வரும். பிரதானமானது, மாணவர்களுடைய கல்வி நிலையில் வீழ்ச்சி.

இவ்வாசிரியர்களுடைய கொடுப்பனவுகள் தொடர்பாக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருடைய உதவியினை பெறுவதென முடிவு செய்தது. ஆசிரியர்களுக்கு உதவு தொகை வழங்குவதற்காக கல்விக் கோட்டங்கள் தோறும் அமைக்கப்படும் கல்விக் கழக ஆசிரியர்கள் உதவு தொகை நிதியத்துக்கு மாதந்தோறும் உங்கள் பங்களிப்பினை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

**– ஈழநாதம் (07.06.1996)**

**ஆடுற மாட்டை ஆடியும் பாடுற மாட்டை பாடியும் கறத்தல் என்பது இதுதான் போல.** ●




இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இலக்கியப் பேரரங்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் (ஜுன் 6ம், 7ம் திகதிகளில்) இரண்டுநாட்கள் நடைபெற்றது சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், போன்ற கலை இலக்கியப் படைப்புக்களின் வளர்ச்சி குறித்தும் மேம்பாடு குறித்தும் பேசப்பட்டது.

தமிழ் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இத்தகைய ஒரு விழாவை நடத்துவதா என்ற குற்ற உணர்வு கருத்தரங்கில் கலந்து கொண்ட பலருக்கும் இருந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் 'எங்கள் மக்கள் அகதிகளாய் அலைகிறார்கள்; பலவித துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்' என்பதை நினைவில் கொண்டிருப்பதை சொல்லிக் கொள்ள விரும்பப்பட்டார்கள்.

கலை இலக்கியங்கள் மக்களுக்காகவே படைக்கப்படுமானால், அவர்கள் தங்களது வாழ்க்கையை வாழும்படி செய்வதாக இருக்குமானால், அதன் வளர்ச்சி குறித்தும் மேம்பாடு குறித்தும் கூடி ஆராய்வதில் பேசுவதில் தவறென்ன இருக்க முடியும்?

மனிதராகவும், பிறரை மனிதராக்கவும் வாழ்கிறவர்களாகவே நல்ல படைப்பாளிகள் இருக்க முடியும். நல்ல படைப்புக்களும் அவ்வாறே. இத்தகைய படைப்புகள், படைப்பாளிகள் குறித்து ஆராய்வதும், பாராட்டப்படுவதும் உயர்ந்த சமூகக் கடமையே தவிர, மனச்சங்கடப்பட வேண்டியதல்ல.

விமானக் குண்டுவீச்சுக்கள், செல்வீச்சுக்களுக்கு மத்தியில் யாழ் குடாநாட்டில் தெருக்கூத்துக்கள், கவிதா நிகழ்வுகள் வில்லுப்பாட்டுக்கள் நடாத்தப்படவில்லையா? அவற்றை மக்கள்தான் பார்த்து ரசிக்கவில்லையா? அவற்றை கூத்தடிப்பதாகவோ, கேளிக்கையில் ஈடுபடுவதாகவோ கருதி யாரும் இழிவுபடுத்தவில்லையே.

ஏனெனில், அவை மக்களின் துன்பங்களை பிரதிபலிப்பவையாக அவர்களது சிந்தனையை கிளறுபவையாக இருந்தன. படைப்பாளிகள் மக்களுடைய துன்பங்களையும், அதிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு தமது பங்கையும் படைப்புகளில் வெளிப்படுத்த வேண்டுமே அல்லாமல் மேடையில் நின்று பச்சாதாபப்பட வேண்டியதில்லை.

பெரும் பொருட்செலவில் இது போன்ற ஒரு நிகழ்ச்சியை நடாத்திய திலும்பார்க்க நான்கு புத்தகங்களை வெளியிட்டிருக்கலாம் என்றும் ஒரு கருத்து எழுந்தது. புத்தகங்களை வெளியிட்டால் மட்டும் அவை பூரணத்துவம் பெற்றவை என்பதாக நாம் திருப்தி அடைந்துவிட முடியுமா? இரண்டுநாள் இலக்கிய பேரரங்கின் முடிவில் இன்னும் சிறப்பாக செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கு ஏற்படுவது போலவே, புத்தகங்களிலும் பல குறைபாடுகளைக் காணவும், அவற்றை இன்னும் சிறப்பாக வடிவமைத்திருக்க முடியும் என்ற எண்ணமும் எமக்கு ஏற்படவே செய்யும் மனிதனின் இந்தத் திருப்தியின்மையே வளர்ச்சிக்கும் அடிப்படை.

'இரண்டு நாட்கள் கலை இலக்கியம் பற்றி ஆராயப்போகிறார்கள்; அதனை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பேரரங்காக ஏற்பாடு செய்திருக்கிறது என்று அறிந்தபோது எழுந்த எதிர்பார்ப்புக்களை உண்மையில் பேரரங்கு பூர்த்தி செய்யவில்லை' என்று இறுதியாக இடம் பெற்ற கலந்துரையாடலிலும் குறிப்பிடப்பட்டது உண்மை.

இதற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை மாத்திரம் குற்றம் கூறிப் பயனில்லை. விழா அமர்வுகளில் பங்கு கொண்ட அனைவரும் அதற்குப் பங்காற்றியிருக்க முடியும். ஆனால் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தவர்களும், அமர்வுகளில் பங்கேற்ற ஒருசிலரும் தவிர ஏனையோர் கலை இலக்கியம் தொடர்பான தேடலும், பேரரங்கு தொடர்பான எதிர்பார்ப்புக்களும் கொண்ட ஒரு கூட்டம் முன்னால் இருப்பதுபற்றி சிரத்தை எடுத்துக் கொண்டதாக தெரியவில்லை.

நிகழ்ச்சிகளின் முடிவில் பல குறைபாடுகளை எம்மால் கண்டு கொள்ள கூடியதாய் இருக்கலாம். ஆனால் காலத்தின் தேவைகளில் இத்தகைய ஓர் அரங்கு அவசியம் என்பதனை மனங்கொண்டு, அதனை நடாத்தி முடிப்பதற்கு தமது உழைப்பையும் நேரத்தையும் செலவிட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாராட்டுக்குரியதே.

**– அறிவுடை நம்பி**

www.padippakam.com




# கிழக்கிற்கு தனிக் கட்சி தேவைப்படுவது ஏன்?

கடந்த 17.07.96 அன்று வீரகேசரி பத்திரிகையில் வெளியான 'கிழக்குத் தமிழருக்கு தனி அரசியல் கட்சி அவசியம் ஏன்?' என்ற கட்டுரைக்குப் பதிலாகவும், தனிக்கட்சியால் ஏற்படும் பேராபத்து பற்றியும் எனது கருத்துக்களை உங்களுடன் பகிர விரும்புகின்றேன்.

முதலில் வீரகேசரி கட்டுரையில் கூறப்பட்டுள்ள நியாயங்களைப் பார்ப்போம்:

1. கிழக்குத் தமிழர்கள் சிங்கள இனமேலாதிக்க அரசுப் படையினருக்கு எதிராக செயல்பட்டமையை சம்பவங்களுடன் குறிப்பிட்டிருந்தார்.
2. இயக்கங்களிடையே ஒற்றுமை.
3. முஸ்லீம்கள், சிங்களவர்கள் உடன் தமிழர்கள் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக போட்டி போட கிழக்கில் தனிக் கட்சி தேவை.




4. கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் காங்கிரசின் வளர்ச்சி, அதன் பாராளுமன்ற உறுப்பினர்களின் அண்மைக்கால நடவடிக்கை, தென்கிழக்கு மாகாணசபைக் கோரிக்கை.
5. வடகிழக்கு இணைப்பை கிழக்கில் வலியுறுத்தல்.
6. கிழக்கில் தனிக்கட்சி அமைந்தால் கூறுபட்டு கிடக்கும் தமிழ் கட்சிகளை ஒன்றுபடுத்த முயற்சிப்போம்.
7. அரசின் தீர்வுத்திட்டம் காலம் தள்ளிப் போவதால், தனிக்கட்சி அமையாவிட்டால் கிழக்குத் தமிழர்கள் பாதிக்கப்படுவர்.
8. தற்போதுள்ள தமிழ் தலைமைகள் வடக்கை மையமாகக் கொண்டுள்ளது. அதனால் கிழக்கிற்கு தனிக்கட்சி தேவை.

எதுவுமே தனித்தனியே பதில் சொல்லத் தேவையற்ற எழுந்தமானங்கள்! உண்மையான காரணம் எங்கோ தொக்கு நிற்பதாய்த்தான் தெரிகிறது. அரசாங்கத்தின் பிரச்சாரகர்கள் இதுபோன்ற இன்னும் பல காரணங்களைத் தேடிக் கண்டுபிடித்து தமிழ் மக்களைக் குழப்ப வேண்டியது அவர்களுக்குச் சரிதான். ஆனால் மற்றவர்களுக்குத் தனிக் கட்சி ஆசை ஏன் வருகிறது என்பது ஆராயப்பட வேண்டிய விஷயம்.

அடக்குமுறை இராணுவத்துக்கு எதிராகப் போராடியதில் துறைநீலாவணை மக்களினதும், திருமலை நடராஜனினதும், கவிஞர் எருவில் மூர்த்தி அவர்களினதும் வீரம் பாராட்டத்தக்கது. ஆனால் ஒட்டுமொத்தமாக வடக்கு கிழக்கு மக்கள் அனைவரும் இணைந்துதான் சிங்கள பேரினவாத சக்திகளுக்கெதிராகவும் அதன் இராணுவத்துக்கெதிராகவும் போராடித் தங்கள் பிரச்சினையை உலகுக்குக் காட்டியுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள் அனைவருமே இனரீதியாக பொதுவான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டதால்தான் அவ்வாறான போராட்டம் வெடித்தது. இப்படியாகத் தங்கள் நியாயபூர்வமான உரிமைகளுக்காகப் போராடுபவர்களைப் பிரித்து விடுவதற்குச் சொல்லப்படுகிற எல்லாச் சாக்குகளும், அடக்கி ஆள விரும்புகிறவர்களுக்கான முண்டு கொடுத்தல்தான். தங்கள் உரிமைகளைக் கேட்டுப் போராடுகிற ஒரு சமூகத்தினரை, எந்த நியாயங்களையாவது சொல்லிப் பிரச்சாரம்செய்து பிரித்து விடுவதுதான், அவர்களைத் தோற்கடித்துவிடச் சிறந்தவழி என்பதை, இன்று சயனைட்டைக் கட்டிக்கொண்டு சாவதை விளையாட்டாய் எடுத்துக் கொள்கிற பால்குடிச் சிறுவன்கூட விளங்கிக் கொள்வான்.

மற்றபடி, ஊருக்கொரு மாகாணசபை கேட்டு, அதற்கு ஒவ்வொரு முதலமைச்சர் பதவியும் கேட்டு, கிடைக்குமானால், எனக்குக் கூட முதலமைச்சராக வாய்ப்பிருக்கிறது. நானும் தனிக் கட்சி தொடங்கிவிட வேண்டியதுதான்.

அது ஒருபக்கமிருக்க, இவ்வளவு நடைபெற்றும் இந்த இயக்கங்கள் ஓரணியில் முழுமையாகத் திரளாதது குறைதான். ஆனால், தோன்றும்போது பல இயக்கங்களாகத் தோன்றியதை நாம் குறைகூற முடியாது.

இலங்கை இன வெறி அரசிற்கு எதிராகத் தொடங்கிய சாத்வீகப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக பரிணமித்தபோது, அதை நசுக்குவதற்கு இலங்கை அரசின் உளவுப்படைகள் வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் மிகத் தீவிரமாக செயல்பட்ட காலத்தில், இளைஞர்கள் தலைமறைவாக ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் வடகிழக்கு கிராமங்களில் இருந்து போராடப் புறப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஒரிடத்துக்கு செல்லவில்லை. வெவ்வேறு இடங்களில் குழுக்களாக சேர்ந்தனர். ஒருவருக்கொருவர் தெரியாமல் பல குழுக்களாக காடுகளில் முகாம் அமைத்து பயிற்சி எடுத்தனர். இதனாலேயே பல இயக்கங்கள் தோன்றியது. காலப்போக்கில் இவற்றுக்கிடையே போட்டி பொறாமை வந்ததெல்லாம் உண்மைதான்.

ஆனால், போராட்டம் வளர்ச்சி நிலையை அடைந்த பிறகு இவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்திருக்க வேண்டும். நடந்ததோ வேறு. போராட்ட சக்திகள் பிரிக்கப்பட்டு போராட்டம் பலவீனப்பட்டது. மக்கள் கூறுபட்டார்கள். ஒரு தனிக்குழுவின் சாகசங்களால் கிடைத்த போலி வெற்றிகளை ரசித்துக் கைதட்டிக் கொண்டிருந்ததில் நாம் போராட்டத்தை நடத்திச் செல்ல வேண்டிய பாதையைக் கோட்டை விட்டோம்.

இன்றும், அந்த சாகசக் குழுவை விட்டால் தீர்வு எதுவும் எடுக்க முடியாமல் போய்விடுமோ என்று கையறுநிலையில் அரசியல் ஆய்வு செய்துகொண்டிருப்பதே பலருக்குப் பிழைப்பாகப் போய்விட்டது.

இந்நாட்டில் சகல இனமக்களும் சம உரிமைகளோடு வாழ்வதற்கெனச் செயற்படத் தயாராக உள்ள அனைவரும் ஓரணியில் திரளவேண்டியது அவசியம். இதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளே இன்றைய தேவை. அழிவுச் சக்திகளின் பின்னால் ஒளிந்துகொண்டு குழப்பியோ அல்லது மக்களைக் கூறுபோட்டோ இந்த நாட்டின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியாது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

முஸ்லீம் காங்கிரசின் வளர்ச்சியும், அதன் தற்போதைய போக்கும் ஒவ்வொருவரையும் சிந்திக்கவே வைக்கின்றன. இலங்கையில் தற்போது நிலவும் இனவெறி, குறிப்பாக புலிகள் முஸ்லீம் மக்கள் மேல் நடத்திய தாக்குதல்கள் என்பனவற்றால் முஸ்லீம் காங்கிரஸ் எனும் கட்சி வளர்ச்சியடைந்ததும், அது தற்போது தென்கிழக்கு மாகாண சபையை கோருவதும், பிரச்சினையை இழுத்தடிக்க விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பானதுதான். முஸ்லிம் மற்றும் தமிழ் கட்சிகளிடம் பிரேமதாசா, "முதலில் உங்களுக்குள் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு வாருங்கள்" என்று, இருக்குமட்டும் 'தர்மிஷ்ட'ராய் இருந்து காலங்கடத்திவிட்டுப் போய்ச் சேர்ந்ததை அறிவோம்.

முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் வெகு தந்திரமாக (புலிகளின் முட்டாள்தனத்தினாலும்) பிரித்தாயிற்று. இனி, வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிட்டால், பிறகென்ன? பிரச்சினை தீர்ந்தது. இளித்தவாயர்களாக்கப்பட்டவர்கள், நாலைந்து வருடங் கழித்து மீண்டும் 'அ' விலிருந்து தொடங்க வேண்டியதுதான்.

இது ஒன்றும் குறுகிய இன நலனடிப்படையில் சொல்வதல்ல; இந்த நாட்டின் பிரச்சினை தீர்வதற்கு கள்ளத்தனமான குறுக்கு வழிகள் உதவாது என்பதைச் சுட்டிக் காட்டுவதே!

பாதுகாப்பின்மையையும், உதாசீனப்படுத்தப்படுவதையும் உணர்ந்த சிறுபான்மை மக்கள் அதை எதிர்த்துப் போராடினார்கள். இன்றைக்கு மட்டும் என்ன உத்தரவாதம் கிடைத்திருக்கிறது? இந்த நாட்டில் பாதுகாப்பாக சம உரிமையோடு கௌரவமாக வாழ்வோம் என்ற நம்பிக்கையைப்பெற என்னதான் இருக்கிறது?

இனி, அவரவர் ஊருக்கொரு கட்சியும் சங்கமும் அமைத்துக் கொண்டு, அபிவிருத்தியைக் கவனிக்கலாம் என்ற முடிவுக்கு எப்படி வருகிறீர்கள்? முதலில் தமிழ் பேசும் மக்கள் கேட்கின்ற – சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்கின்ற – நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு ஏதேனும் உத்தரவாதங்களைத் தர வேண்டாமோ? அரசியலமைப்பு யாப்பில் அவை உறுதிப்படுத்தப்பட வேண்டாமோ?

அதையெல்லாம் செய்வதற்கு முன்னால், தங்கள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளப் போராடிய மக்களைக் கூறுகூறாகப் பிரித்து விடுவதற்கான முயற்சிகளைச் செய்வது வெறும் சூழ்ச்சியல்லாமல் வேறென்ன? வேறு வேறு சொந்த அபிலாசைகளுக்காக இதற்குத் துணைபோகும் விதத்தில் நடந்து கொள்வது துரோகமாகிவிடாதா? சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

கிழக்கில் பல பேரிடம் யாழ்ப்பாணத்தானுடன் வாழமுடியாதுஎன்ற கருத்து அன்றுதொட்டு நிலவி வருகின்றது. அதற்குப் பல்வேறு காரணங்களும் உண்டு. இதைப் பயன்படுத்திக்கொண்டு அரசு, வடக்கு கிழக்கை துண்டாடுவதற்காக கிழக்கில் சில நாடகங்களை ஆடலாம். கிழக்கிற்கு தனிக்கட்சி என்று யார் உருவாக்கினாலும், அவர்கள்அதை இணைப்பிற்கு எதிரானது அல்ல என்று கூறிக்கொண்டாலும் காலப் போக்கில் அதற்கே பயன்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆதமன்,
கல்லடி, மட்டுக்களப்பு.

# புலிகளுக்கோ அரசுக்கோ ஆலவட்டம் பிடிக்காதீர்கள்

உங்கள் பத்திரிகையை கடந்த பல வருடங்களாக நான் படித்து வருகிறேன். உங்கள் ஆக்கங்கள் அரசையும் புலியையும் துணிந்து விமர்சிப்பதை வரவேற்கிறேன். விதிக்குரங்கால் கிழித்தெறியப்பட்ட எமது மண்ணின் அவலங்களை சித்தரித்துக் காட்டுவது உங்கள் பத்திரிகையை மெருகூட்டும்.

மேலும் உங்கள் பத்திரிகையில் செய்திகளையும் விமர்சனங்களையும் பிந்தியே தருகிறீர்கள். புலிகளை அராஜகவாதிகள் என்கிறீர்கள்; கொலைகாரர்கள் என்கிறீர்கள்; பாசிசவாதிகள் என்றும் கூறுகிறீர்கள். நமது போராட்டத்தை சின்னாபின்னப்படுத்தியவர்கள் புலிகளே என்று கூறுகிறீர்கள்.

சரி, இந்த அரசுடன் சேர்ந்து புலிகளை அழித்து விட்டீர்கள் என்று வைப்போம். இந்த அரசு சரியான ஒரு தீர்வை முன்வைக்காமல் அடுத்த தேர்தல் மட்டும் இழுத்தடித்து, அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வருகிறது, அல்லது இவர்களே வருகிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். வந்த உடன் இந்த நாட்டில் ஒற்றை ஆட்சிதான் என்கிறார்கள். தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைக்கவில்லை என்றால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? உங்கள் முடிவுதான் என்ன? திரும்பவும் இந்தியாவுக்கு ஓடப்போகிறீர்களா?

காமாலைக் கண் உள்ளவனுக்குக் காண்பதெல்லாம் மஞ்சளாய்த்தான் தெரியும். அதே மாதிரித்தான் இந்நாட்டின் அரசுகள். தமிழர்கள் எல்லோரையும் புலி என்றுதான் பார்க்கிறார்கள். இதற்கு மாற்றுவழி நீங்கள் கண்டு பிடித்தீர்களா?

உங்கள் கட்சியின் செயலாளர் கூடிக்கூடி சந்திரிகா அம்மாவுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். பல்வேறு சிறைச்சாலைகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதைக்குட்பட்டு வாடுகிறார்கள். இதைப்பற்றி நீங்கள் ஏதாவது அரசுடன் பேசுகிறீர்களா? அல்லது உங்கள் பத்திரிகையில்தான் எழுதுகிறீர்களா?

ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்சியில் இருக்கும் போது தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைச் செய்து வந்தது. அது இன்னும் தொடர்கிறது. இந்த அரசையும் புலிகளையும் விமர்சிக்கும் நீங்கள், புலிகளுக்கும் அரசுக்கம் ஆலவட்டம் பிடிக்கும் மற்றப் பத்திரிகைகள் போல் நீங்கள் இருக்காமல், ஜனநாயக வாதிகள் என்றும் தனித்துவமானவர்கள் என்றும் மக்களுக்கு காட்டிக்கொண்டு உண்மை விடயங்களை ஏன் மறைக்கிறீர்கள்?

புலிகளுக்குப் பயந்து சில உண்மை விசயங்களை பல பத்திரிகைகள் மறைக்கின்றன. உங்கள் பத்திரிகைதான் துணிந்து பல செய்திகளைப் போடுவதால் அதை வரவேற்கிறேன். அதுபோலவே அரசினது தமிழர் விரோதச் செயல்களையும் மூடிமறைத்துச் செல்லாமல் உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொண்டு கடிதத்தை முடிக்கிறேன்.

தமிழ்ச்செல்வன்
மன்னார்.

# குறைந்த பட்சமான ஒரு தீர்வையேனும் கொண்டு வந்துவிட முயலுங்கள்!



அன்புடன் புதிய கண்ணோட்டத்திற்கு,

தங்களின் பத்திரிகை மற்றும் தங்களின் ஏனைய வெளியீடுகள் அனைத்தும் படித்து வருவதுடன், அவற்றை நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தியும் வருகிறேன். புதிய கண்ணோட்டம் சீரான அருமையான அமைப்புடனும், காத்திரமான அரசியல் விடயங்களை சுமந்தும் வருகிறது. சிறுகதை, புத்தக விமர்சனம், கவிதைகள், இலக்கிய நிகழ்வுகள் போன்ற அம்சங்களையும் படிப்படியாக உள்ளடக்கி வருவது பாராட்டுக்குரியது.

உங்களுக்கு எம்.பி.க்கள் யாரும் இல்லாவிட்டாலும் அரசியல் காய் நகர்த்தலில் முக்கிய பங்காற்றி வருகிறீர்கள் என்றே தெரிந்துகொள்கிறேன். அதனால், சில ஆலோசனைகளையும் உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

தோழர் பத்மநாபா காலத்திலிருந்து தமிழ் அரசியல் சக்திகளிடையே ஐக்கியத்திற்காக எவ்வளவு விட்டுக்கொடுப்புகளையும், முன்முயற்சிகளையும் நீங்கள் மேற்கொண்டு வருகிறீர்கள் என்பதறிவேன்.

இன்றைய காலகட்டத்தின் பிரதான தேவையாக இருப்பது அனைத்துத் தமிழ் அமைப்புகளிடையேயுமான ஒற்றுமைதான். அதைச் சாதிக்க வேண்டியது உங்கள் முன்னுள்ள ஒரு பாரிய கடமை. ☞

www.padippakam.com



அத்துடன், யுத்த சகதிக்குள் மூழ்கிக் கொண்டிருப்பவர்களை வெளியே எடுப்பதற்கான மூன்றாவது சக்தியொன்றின் தலையீட்டைக் கொண்டுவருதல்.

இந்தஅரசாங்கத்தின் காலத்திலேயே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான ஒரு தீர்வினைக் கொண்டுவந்துவிட வேண்டும். அதிக விடாப்பிடிகளோடு இழுத்துக்கொண்டிராமல், காலப்போக்கில் செழுமைப்படுத்தத்தக்க குறைந்தபட்சமான ஒரு தீர்வேனும் உருவாவதற்கு வழி காண வேண்டும். இந்தச் சமயம் நழுவிப் போய்விடக் கூடாது. இயலக்கூடிய தமிழ் தரப்பினரை எல்லாம் ஒரு இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர நீங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

முட்டுக்கட்டைகள் போட்டபடியே பிரச்சினையைத் தொடர்ந்தும் இழுத்துக்கொண்டு செல்வது, தமிழ் மக்களை மேலும் மேலும் வேண்டாத கனவுகளோடு படுகுழிக்குள் தள்ளிக்கொண்டிருப்பதாகவே இருக்கும்.

வேறென்ன? புதிய கண்ணோட்டத்தில் அரச படைகளாலும், பாசிசப் புலிகளாலும் கொல்லப்பட்ட அனைத்துப் போராளிகளின் விபரங்களையும் திரட்டி மாதந்தோறும் வெளியிடுவதற்கு முடியுமா? நண்பர்களும் நானும் ஆவலுடன் அடுத்த புதிய கண்ணோட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.

*ஸ்ராலின்,*
*சுவிற்ஸர்லாந்து.*

# கண்ணன் காட்டிய வழி: சங்கடங்களின்போது மௌனம்

கடந்த மாதம் வெளியான புதியகண்ணோட்டம் பத்திரிகையில் புத்தகம் புதிது என்ற பகுதியில் இலங்கையில் அண்மையில் வெளியான புத்தகங்கள் பற்றி அறிமுகம் செய்து, அந்தப் புத்தகங்கள் பற்றிய உங்கள் விமர்சனங்களையும் எழுதியிருந்தீர்கள்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.ரி. தமிழ்மாறன் அவர்கள் எழுதியுள்ள 'தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் - மோதல்களும் தீர்வுகளும்' புத்தகம் தொடர்பாக நீங்கள் தெரிவித்துள்ள கருத்துக்களுடன் நான் முற்றிலும் உடன்படுகின்றேன்.

இது முதல் முயற்சியல்ல என்பதற்கு நீங்கள் குறிப்பிட்டுள்ள பட்டியலில், யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியான 'தளிர்' சஞ்சிகையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அயர்லாந்து விடுதலைப் போராட்டம், பிலிப்பைன்ஸ் அனுபவங்கள் தொடர்பாகவும் யாழ் பல்கலைக்கழக வட்டாரத்திலிருந்து இரு வெளியீடுகள் வந்தன.

திரு. தமிழ்மாறனுடைய முயற்சி எவ்விதம் புறக்கணிக்கப்பட முடியாததோ, பாராட்டுக்கு உரியதோ அவ்வாறே இதற்கு முந்திய முயற்சிகளும் புறக்கணிக்கப்பட முடியாதவை, காத்திரமானவை.

எழுதி வெளியிட்டவர்களது பார்வைகள் வித்தியாசப்படலாம். ஆனால், வெளிநாட்டு விடுதலைப் போராட்டங்களை ஒப்புநோக்கி, அந்த சம்பவங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையும் செயற்பாடும் இருக்காத ஒன்றில்லை.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக நமது 'பெரியோர்' எனப்படுபவர்கள் பெரும்பாலும் 'சங்கடங்களின்போது மௌனம்' என்கிற கண்ணபிரானது உத்தியைக் கடைப்பிடிப்பவர்கள். மேடையில் ஏற்றிவிட்டவரை, கூச்சநாச்சமில்லாமல் 'இவர்தான் வரலாற்றிலேயே முதல் நபர்' என்கிற மாதிரிப் புகழ்ந்துதள்ளுவார்கள். சொல்ல விருப்பப்படாத பழைய விஷயங்களெல்லாம் இவர்களுக்கு அந்தந்த நேரத்தில் வசதியாக மறந்து போகும். தில்லோ திராணியோ அற்ற இவர்களுடைய வழவழாத்தனங்களும்தான் இன்றைய நமது மக்களின் அவலங்களுக்குப் பெரிய காரணம்.


உங்கள் பத்திரிகையில் 'புத்தகம் புதிது' என்ற பகுதியைத் தொடரவும். புத்தகத்தை வெளியிட்டோர், விலை, பக்கங்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களையும் சேர்த்துக் கொள்ளவும்.




ஈழப்போராளிகளின் ஆரம்பகாலக் கைநூலாக விளங்கிய 'லங்கா ராணி'யை எழுதிய அருளர் அவர்கள் 'இலங்கைச் சரித்திரத்தில் விடுபட்ட பக்கங்கள்' என்பதாக சமீபத்தில் The Traditional Homeland of The Tamils என்ற ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இதுபற்றி உங்கள் பத்திரிகை எதுவும் குறிப்பிடவில்லை.

*அன்ரனி வசீகரன்*
*தாம்பரம், சென்னை.*

# குறுக்கெழுத்துப் போட்டி-25



## இடமிருந்து வலம்

1. முல்லைத்தீவுத் தாக்குதலுக்கு புலிகள் வைத்துக்கொண்ட பெயர். ஒரு திரைப்படத்தின் பெயருங்கூட.
8. இந்தப் பேச்சால் மனதைப் புண்படுத்தலாம்.
9. வர்ணம், மருந்து ஆகியவை தயாரிக்கப் பயன்படும் பாலைத் தரும் ஒருவகை மரம்.
12. புலியைப் போல ---.
13. பரம்பரை.
15. காடு. (தலைகீழ்)
18. இரு தரப்பினருக்குமிடையே இணைப்பாக பணம் பெற்று முடிக்கும் தொழில்.
21. பருமன்.
23. கண்களைச் சுற்றி வலி ஏற்படுத்தும், மண்டையோட்டுப் பகுதியில் உண்டாகும் அழற்சி.
25. அகத்தின் அழகு வெளியே தெரியும் இடம்.
26. இது போன கண்ணாடியில் முகம் பார்க்க முடியாது.
28. மிகப் பெரியதைக் குறிக்கும் அடைமொழி.
29. ஆண் யானை. (தலைகீழ்)
30. தலையில் கொம்பு உடையவனாகக் காட்டப்படும் யமனின் சேவகன்.
31. திசை.
32. வழுக்கிவிடும் பச்சை நிறத் தாவரம்.
34. அனைத்து அதிகாரங்களும் மக்களுக்கே என்ற அடிப்படையிலான அரசியல் அமைப்பு.
35. வியாசம்.

## மேலிருந்து கீழ்

1. ஓர் அடிக்குப் பன்னிரண்டு.
2. பொன்னியின் புதல்வர். அவதாரப் பெயரில் பிரபலமான எழுத்தாளர்.
3. சித்திரம்.
4. வகைப்படுத்து அல்லது பிரி.
5. திறமையான வழிமுறை. (தலைகீழ்)
6. இது மட்டுமே எப்போதும் மாறாது என்றார் மார்க்ஸ். (தலைகீழ்)
7. பல்லுக்கு உவமையாகும் பூ. (தலைகீழ்)
10. இலங்கையின் நீண்ட ஆறு. (தலைகீழ்)
11. பத்து. (தலைகீழ்)
14. ஆளுமை மிக்க தோரணை. (தலைகீழ்)
16. கேரளாவின் நாட்டிய நாடகம்.
17. சிரமம். (குழம்பி)
19. முன்புறம் உடலை வளை.
20. பூவைக் கிளையுடன் இணைப்பது. (தலைகீழ்)
22. கிரகங்களில் வெள்ளி. (தலைகீழ்)
24. ஒன்றுக்கொன்று சமமான கணிதக் கூற்று.
25. கொறிக்க நல்ல தின்பண்டம்.
27. சும்மா கிடக்கும் இதை ஊதிக் கெடுப்பதுண்டு.
31. அழகுக்கு இவள். (தலைகீழ்)
33. மழி.

## கு.எ.போட்டி-24 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. தியாகிகள் தினம் | 1. திரை |
| 6. கரை | 2. யாகசாலை |
| 7. ஊன் | 3. கடூரம் |
| 8. சாதாரணம் | 4. திடம் |
| 10. கர்ம(ம்) | 5. வன்மம் |
| 11. நிலையம் | 7. ஊர்வம்பு |
| 12. சுபாவம் | 9. தாயகம் |
| 13. பிரபலம் | 10. கபாலம் |
| 14. வானம்பாடி | 11. நினைவாலயம் |
| 16. வேம்பு | 12. சுபவேளை |
| 17. வத்தளை | 13. பிடித்தம் |
| 20. யதார்த்தம் | 15. பாவத்தின் |
| 21. மந்தி 22. திம்பு | 18. தம்புரா |
| 23. வேடன் | 19. உதிரம் |
| 24. ராட்டினம் | 21. மகுடி |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**வி. அனுசூயா,**
**விநாயகர் வீதி,**
**மட்டக்களப்பு.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு பேர்கள் வருமாறு:**


1. எஸ். குலேந்திரன்,
297, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
2. பா. பிரியதர்ஷினி,
4ம் கட்டை, மன்னார் வீதி, வவுனியா.
3. ரவி இதயரம்மியா,
72, உவர்மலை, திருகோணமலை.
4. ஐ. கருணைசிங்கம்,
158/3, சிறீவிக்ரம மாவத்த, கொழும்பு-15.
5. எல். ஸ்ரனிஸ்லோஸ்,
விடத்தல்தீவு, மன்னார்.
6. ஏ. மன்மதன்,
ஆலய வீதி, பாலையூற்று.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

# இரண்டு பீரங்கிகளின் நிழலில் மக்கள்!

மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவதற்காக தங்கமாகவும் ரொக்கமாகவும் வாரிச்சுருட்டிய புலிகளுக்கும் பேரினவாத இராணுவத்துக்கும் இடையில் சிக்கி நம் மக்கள் படும் வேதனைகள், இழப்புக்கள் சொல்லிமாளாதவை. மக்களின் விடுதலையை தமது கொந்தராத்து வேலையாக எடுத்துக் கொண்ட புலிகளோ, போராட்டத்தின் பெயரால் "உங்களது உயிரைத் தாருங்கள். சொத்துக்களைத் தாருங்கள். உங்கள் பிள்ளைகளைத் தாருங்கள். ஆனால் நீங்கள் எதுவுமே பேசக்கூடாது.



செய்யக்கூடாது" என்று மக்களின் வாயை அடைத்த விளைவு, மக்கள் இராணுவச்சூழலில்வாழும் இன்னுமொரு சுதந்திரமற்ற சூழ்நிலையை, அதைவிடப் பரவாயில்லை என்று ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளியது. எல்லாவற்றுக்கும் மேலாக, என்னதான் அழிவுகள் நேர்ந்தாலும் தாம் பாரம்பரியமாகவாழ்ந்த இடங்களிலேயே வாழ விரும்பினார்கள். இவர்களைத்தான் துரோகிகள் என புலிகள் கூறியுள்ளார்கள். தம்மோடு காட்டுக்கு ஓடிவந்து, தமக்குப் பாதுகாப்பாக இருக்கவில்லை என்பதற்காக இந்த ஒட்டுமொத்தமான துரோகப் பட்டம்.

யாழ் கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தை மீள இயங்கவைக்கும் முயற்சிகளின் ஒரு விழாவில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் கலந்துகொண்டார். யுத்த இடிபாட்டு திருத்தங்களுக்கு இக்கூட்டுத்தாபனத்தின் செயற்பாடு மிக அவசியம். விழாவில் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள். மக்களோடு மக்களாக நின்று அமைச்சரைக் கொன்று தம் மாவீரத்தனத்தை பறைசாற்ற புலிகள் திட்டம் போட்டார்கள். மக்களைப் பற்றி கவலைப்படாத தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது. குறிவைக்கப்பட்ட அமைச்சர் உயிர்தப்பிவிட்டார்; கொல்லப்பட்டதோ பொது மக்கள்தான். பொதுமக்களின் இழப்புகள் பற்றி பாஸிச புலிகளுக்கு அக்கறையில்லை என்பது உலகறிந்த விடயம்தான். ஆனால் இந்தக் குண்டுத்தாக்குதல் பற்றி ஆஹாஓஹோ என்று கதைவிடும் தமிழர் பத்திரிகைகள் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் பற்றி ஒரு வரியாவது எழுதினார்களா? மக்கள் கொல்லப்பட்டதை எழுதி புலிகளிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டிவரும் என்ற பயம்.

தயவு செய்து நீங்கள் செய்யும் தொழிலின் கௌரவத்தைகாப்பாற்றுங்கள். செய்திகளைத் திரிபுபடுத்தாமல் உண்மைகளை மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நேயர் விருப்பம் வாசகர் விருப்பம் அல்ல செய்திகள். எங்கோ இருக்கும் உங்கள் புலி எஜமானுக்குப் பயந்து பத்திரிகை நடாத்துவதிலும் பார்க்க அதை நிறுத்தி விடுவதே நல்லது.


பத்திரிகைச் சுதந்திரம் தாராளமாக உள்ள இந்த ஜனநாயக நாட்டில் ஏன் பயப்பீதியுடன் பே[illegible]னாவைத் தொடுகிறீர்கள்? வேறு பத்திரிகைக[illegible]ில் வரும் கட்டுரைகளை பிரசுரித்து உங்கள் சரக்கிருப்பை வெளிக்காட்டும் நீங்கள்

தொடர்ச்சி 11

www.padippakam.com



# புத்தகம் புதிது புத்தகம் புதிது புத்தகம் புதிது புத்தகம் புதிது புத்தகம் புதிது புத்தகம்




நாம் வாழும் இலங்கைச் சமூகம் மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கின்ற ஒரு அமைப்பாகும். பெரும்பான்மை மக்களின் வாழ்வு, துன்ப துயரங்கள், அமைதியின்மைகள், வறுமையின் தாக்கங்கள் நிறைந்ததாயிருப்பதற்கு மனிதனை மனிதன் சுரண்டுகின்ற வர்க்க சமுதாயமே காரணமென்பதை அறிந்தேன்.

அரசியலே சகலவற்றையும் தீர்மானிக்கின்றது. இந்த ஒரவஞ்சகமான சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்கு உழைக்கும் மக்களின் அரசியலாலேயே முடியுமென்ற கோட்பாட்டின் அடிப்படையில், இச் சமுதாய அமைப்பை மாற்றி அமைத்து, சகலரும் சரிநிகர் சமானமாக, சுபிட்சமாக வாழத்தக்க ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காக மக்களைத் தயார்ப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த மார்க்சிய இயக்கத்திலே இணைந்து உழைத்தேன்.

அந்த இயக்கம் எனக்கு ஒரு சரியான உலகப் பார்வையை அளித்தது. மக்களை நேசிக்கக் கற்றுக் கொடுத்தது. மக்களிடம் கற்று மக்களிடமே மீண்டும் அளித்தல் வேண்டும் என்ற கோட்பாட்டைப் போதித்தது.

இவைகளால் தெளிவும், பரந்த உணர்வும் பெற்ற நான் மனிதனை மனிதன் சுரண்டுவதை அம்பலப்படுத்தவும், சுரண்டலினால் மக்கள் வாழ்வில் விளைகின்ற துன்ப துயரங்கள், அவலங்கள் ஏக்கங்கள், கல்வி அறிவின்மை, அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்படுதல் முதலியவைகளை வெளிப்படுத்தவும் நான் எழுதத் தொடங்கினேன்.....

இவ்வாறு தனது சிறுகதைத் தொகுதியின் 'என்னுரை'ப் பகுதியில் குறிப்பிடுகிறார் யோ. பெனடிக்ற் பாலன். உள்ளிருக்கும் கதைகளும் இப்பிரகடனத்தை உறுதிப்படுத்துகின்றன.

வெளியீடு: விவேகா பிரசுராலயம்,
134, எலிஹவுஸ் வீதி, கொழும்பு-15.
விலை: ரூபா 125





அருளர் ஆங்கிலத்தில் "இலங்கையின் வரலாற்றில் தவறவிடப்பட்ட பக்கங்கள்" என்ற தனது நூல் தொகுதியின் முதல் பாகத்தை வெளியிட்டுள்ளார். வடகிழக்கானது தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதை வலியுறுத்துவதாக இந்நூல் அமைகிறது. தமிழர்களின் பாரம்பரிய கிராமங்கள் எவையெவை, எவ்வாறு திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்பட்டன என்பது பற்றி விலாவாரியாக விபரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமூக அரசியல் மாற்றங்கள் ஐதீகக் கதைகள் நிலவிய காலத்திலிருந்து சமகாலம்வரை ஆராயப்பட்டுள்ளது.

77 இன வன்முறையின் பின்னர், விடுதலைப் போராட்டத்தை மையமாக வைத்து 'லங்கா ராணி' நாவலைப் படைத்த அருளர் இரு தசாப்தங்களின் பின்னர், தமிழர்களின் பிரதேசங்கள் வெட்டித்துண்டாடப்படும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், பாரம்பரிய பிரதேசம் என்ற கருத்துக்கு வலு சேர்க்கும் விதத்தில் இந்நூலை எழுதியுள்ளார். காலம் உணர்ந்து மேற்கொண்ட முயற்சி.

அதேவேளை சிங்கள பேரினவாதத்துக்கு வலு சேர்க்கும் விதத்தில் சிலர் எழுதிவருவது போன்று, தமிழ் குறுந்தேசியவாதத்துக்கு வலு சேர்க்கும் விதத்தில் இந்நூல் அமைந்திருப்பதாகப் பார்க்கப்படக் கூடிய ஆபத்தும் உண்டு. இவ்வாறு ஆங்கிலத்தில் எழுதப்படும் நூல்கள், சிங்களப் புத்திஜீவிகளிடையே தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்த சரியான விளக்கங்களையும், கோரிக்கைகளிலுள்ள நியாயங்களையும், நீதியான அபிலாசைகளையும் சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படுவதற்கு உதவ வேண்டும். குமார் பொன்னம்பலம் போன்றவர்களின் குரல் போலப் பார்க்கப்பட்டுவிடுமானால், அது எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்திவிடும் என்பதிலும் அருளர் போன்றவர்கள் கவனமுடன் இருக்க வேண்டும்.

நூலின் இனிவரும் பாகங்களையும் எழுதுவதற்கு வேண்டிய உற்சாகமும், நிதி ஒழுங்குகளும் அருளருக்கு கிடைக்க வேண்டுமென வாழ்த்துவோம்.




மலையக கலை இலக்கியப் பேரவையினரின் சஞ்சிகையான 'கொழுந்து' மீண்டும் வெளிவருகிறது. 1988 தையில் கொழுந்தின் முதல் இதழ் வெளிவந்தது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது இதழ்கள் 1989ம் ஆண்டில் வந்தன. 1990 ஐப்பசியில் ஆறாவது இதழ் வந்ததோடு, சுமார் ஆறு ஆண்டுகள் நின்றுபோயிருந்த 'கொழுந்து' மீண்டும் துளிர்விட்டிருக்கிறது.

சிற்றேடுகளுக்குரிய பொதுச் சிறப்பியல்பான சஞ்சிகை வெளியீட்டாளர்களைப் பிழிந்து முடக்கிவிடும் வலியையும், அந்தனி ஜீவாவின் சுறுசுறுப்பு விடாமுயற்சியையும் மேற்கண்ட 'கொழுந்து' வரலாறு சொல்கிறது.

இந்த இதழில் அந்தனி ஜீவா, சாரல்நாடன், மேமன்கவி மற்றும் தமிழகத்தைச்சேர்ந்த திருப்பூர் கிருஷ்ணன், டாக்டர் கே.ஏ.குணசேகரன் ஆகியோரின் கட்டுரைகளும், தான்தோன்றிக் கவிராயர், சு.முரளிதரன் ஆகியோரின் கவிதைகளும் உள்ளன.

வெளியீடு: மலையக கலை இலக்கிய பேரவை
57, மகிந்த பிளேஸ், கொழும்பு 06.
விலை: ரூபா 10



ஒரு விடுதலைப்போரின் போக்கில் நடக்கும் தவறுகள் விடுதலைப் போராட்டத்துக்கே கேடானவை. போராட்டத்தின் போக்கில் நிகழும் தவறுகள் உடனுக்குடன் திருத்தப்படாவிடின் போராட்டம் பலவீனமடையும். போராட்டம் பற்றிய விமர்சனங்களிற் சிநேகமானவற்றையும் பகைமையானவற்றையும் வேறுபடுத்திக் காணும் தேவையைப் பலரும் மறந்து விடுகின்றனர். பகைமையான விமர்சனங்களிற் கூடப் பயனுள்ள அம்சங்களை எடுத்துக்கொள்ளும் மனப் பக்குவம் ஒரு விடுதலை இயக்கத்துக்கு மிக அவசியம்....

இவ்வாறு தனது 'போரின் முகங்கள்' கவிதைத் தொகுதிக்கான முன்னுரையில் இதமாகக் குறிப்பிட்டிருக்கிறார் பேராசிரியர் சிவசேகரம். நமது பேராசிரியர்களது இவ்வாறான விளக்கங்களையும் இன்றைய போராட்டத்தின் போக்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது 'இது விடுதலை இயக்கம் இல்லை' என்ற தெளிவான விடைதான் நமக்குக் கிடைக்கிறது.

பேராசிரியர் போன்றவர்களின் கருத்தென்ன? நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போராட்டம் பிழை என்கிறார்களா? கொஞ்சம் திருந்தினால்போதும் என்கிறார்களா?.....நாம் குழம்ப வேண்டித்தான் இருக்கிறது. வெகு ஜனங்கள் ஒருவேளை நம் அறிஞர்களது கருத்துக்களைச் சரியாகப் புரிந்துகொண்டு விடுகிறார்களோ என்னவோ?

'பேராசிரியர் போன்றவர்களும் நடந்து கொண்டிருப்பது நமது மக்களின் விடுதலைக்கான போராட்டம் இல்லை என்பதைத்தான் சொல்கிறார்கள்; ஆனால் நேரடியாகச் சொல்லிவிட முடியாதபடி பல தடைகள் இருக்கிறது தானே' என்றும் நாம் சமாதானப்பட்டுக் கொள்ள முடியாமலிருக்கிறது. 'புண்களில் சீழ்வடிய, குருதி படிந்த மேனியுடன், ஆடைகள் அழுக்கேறி நாற, கைகளிற் கொலைக் கருவிகளுடன் வரும் புரட்சியாலும் உலகம் மாறும்' என்று எழுதுகிறார்கள்.

"எவ்வளவு பண்பட்டவரும் ஆசாரசீலரும் தான் சார்ந்த அதிகார வர்க்கத்தின் நலன்களைப் பேணச் செயற்படும்போது கொடுமை செய்வோரின் தரப்பிலேயே நிற்கின்றனர். எட்ட இருந்து கர்ணனதும் பீஷ்மரதும் துரோணரதும் உயர் பண்புகளை நாம் நயக்கலாம். போர்க்களத்தில் அவர்கள் தீயோரின் சார்பாக ஆயுதந் தரித்துள்ள சூழலில் அவர்களைத் தவிர்த்துத் தீயோரை அழிக்க முடியாது போகின்றது." என்று 'டானியலின் மாக்ஸியமும் தலித்தியமும்' என்ற தனது வேறொரு கட்டுரையில் குறிப்பிடுகிறார் சிவசேகரம். கொடுமை செய்வோர் தரப்பு என்பது வெறுமனே அரசாங்கத்தினர் மட்டுமில்லை என்று புரிகிறது. நமது கல்விமான்களும், கவிஞர்களும், சுதந்திரமாய்க் கருத்துச்சொல்ல விரும்புகிறவர்களும், தான் சரியென்று கருதுகிறவற்றை மக்களுக்குச் சொல்லித் தன்மானத்தோடு வாழவிரும்புகிறவர்களும் இன்று சொந்த இடங்களில் வாழமுடியாமற் போனது யாரால் என்பது நமக்குத் தெரியும்.

ஆனாலும், இன்று 'புரட்சி இதுவல்ல' என்று அழுத்தம்திருத்தமாக சொல்கிற புத்திமான்களைத் தேடினால், அவர்கள் மிகச் சில பேராகவே இருக்கிறார்கள். நமது பார்வையில் இது துரதிர்ஷ்டகரமான விடயம்தான். மற்றபடி, நாசூக்காகவேனும் அங்கங்கே கண்டித்து எழுதப்படுவதையெல்லாம் நாம் பாராட்டவும்தான் வேண்டும்.

சி.சிவசேகரத்தின்
"போரின் முகங்கள்"

வெளியீடு:
தேசிய கலை
இலக்கியப் பேரவை.
14, 57வது ஒழுங்கை,
கொழும்பு 06.

விலை: ரூபா 40

## புரட்சியும் புத்திமான்களும்

அவர்கள் புத்திமான்கள்
உறுதியளிக்கப்பட்ட புரட்சி வருமென அறிவார்கள்
புரட்சி அழகானதென்வும் புனிதமானதெனவும்
புனித உலகொன்றை அமைக்குமெனவும்
அவர்கள் அறிவார்கள்
புரட்சி கொடுமைகளை எவ்வாறு சாய்க்குமெனவும்
புரட்சியை எவர் செய்வரெனவும்
புரட்சி எப்பொழுது நிகழுமெனவும்
அவர்கள் அறிவார்கள்
புரட்சி வந்த பின்பு
எவரெவர் என்ன செய்யலாமெனவும்
அவர்களே அறிவார்கள்
புண்களிற் சீழ்வடியக்
குருதிபடிந்த மேனியுடன்
ஆடைகள் அழுக்கேறி நாறக்
கைகளிற் கொலைக் கருவிகளுடன்
புரட்சி வந்தது
புரட்சி இதுவல்ல என்று
புத்திமான்கள்
அழுத்தம் திருத்தமாக ஆதாரங்களுடன் வாதிட்டனர்
ஆயினும் உலகம் மாறியது.

நம் சூழலில் கலைஞனாக வாழ்வது என்பது எதற்காகவென்றால் சமூக வாழ்வில் ஒரு மேலான இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, அதன் மூலம் சமூகத்தின் மீது அதிகாரம் பெறுவதற்கு, அதன்மூலம் வாழ்வின் நடைமுறைத் தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு, இப்படித்தான் அல்லது பெரும்பாலும் இந்த நோக்கத்திற்காகத்தான் இங்கே கலை பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு அரசியல்வாதியைப் போல, ஓர் அதிகாரியைப் போல, ஒரு மதகுருவைப் போல, அவர்கள் எவ்வகைப்பட்ட மேலாதிக்கத்தைத் தங்கள் அரசியலின் மூலமும், அதிகாரத்தின் மூலமும், மதத்தின் மூலமும் நிறுவ முற்படுகிறார்களோ அதேவகைப்பட்ட அதிகாரத்தைத் தன் படைப்பின் மூலம் நிறுவ முற்படுபவனாகவே இங்கே கலைஞன் என்று தம்மை அழைத்துக் கொள்ள விரும்புவோரில் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள். - தேவிபாரதி

படிப்பகம்

www.padippakam.com



ஒரியா மொழிச் சிறுகதை

# வெகுமதி

பகவதிசரண் பாணிக்ராகி

ஆங்கிலம் வழி தமிழில் : தேவகி குருநாத்



ஒரியா மொழியின் இலக்கிய கர்த்தாக்களுள் பகவதிசரண் பாணிக்ராகி மிகவும் குறிப்பிடத்தக்கவர். முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் முன்னோடி என்று கருதப்படுபவர். இந்தச் சிறுகதை (ஷிகார்) மிருணாள் சென்னால் 'ம்ருகாயா' என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டது.

அந்தப் பிராந்தியத்தில் கினுவா ஒரு பெயர் பெற்ற வேட்டைக்காரன். ஒரு துப்பாக்கியை எப்படி உபயோகிப்பது ர்பது அவனுக்குத் தெரியாது. வனது பிரதான ஆயுதமெல்லாம் கயால் தயாரிக்கப்பட்ட ஒரு வில் ம் அம்பும்தான்.

அவன்அம்பு எய்யும்போது மல் ந்து தரையில் படுத்துக்கொள் ான். இடதுகாலை வில்லின்மீது தித்துக்கொண்டு காதுவரை ணை இழுத்து அம்பு விடுவான். ம்பினால் இரண்டு மைலுக்கு ப்பால் நிற்கும் மிருகத்தைக்கூட ழ்த்தி விடுவான். அவன் அம்புக க்கு நூற்றுக்கணக்கான மான் ளும், கரடிகளும், பன்றிகளும் லியாகியிருக்கின்றன. எண்ணற்ற றுத்தைப் புலிகளை அவன் வீழ்த் யிருக்கிறான். ஆனால், வங்காள ாஜப் புலிகள் இரண்டே இரண்டை ட்டும்தான் அவனால் வீழ்த்த டிந்திருக்கிறது. வங்காள ராஜப் லிகளைக்கொன்றதற்காக டெபுடி மிஷனர் அவனுக்கு ('பக்ஷீஸ்') வகுமதியளித்துப் பாராட்டியிருக் றார்.

அன்று அதிகாலை, ஒரு புதிய வட்டையுடன் அவன் டெபுடி கமி னர் பங்களாவிற்கு வந்தான். அவ ாது வில் ஒரு தோளில் தொங்கிக் கொண்டிருந்தது.

மற்றொரு தோளில் கைக்கோ ரி. இரண்டு மூன்று அம்புகள் அவன் கையிலிருந்தன. இந்தத் தோற்றத்துடன் கினுவாவைப் பார்த் 5 பங்களா பாராக்காரன்,

"ஏய், இன்று என்ன வேட்டை? ன்று ஆர்வத்துடன் விசாரித்தான்.

அந்தப் பாராக்காரன் கினுவா விற்கு நெருங்கிய நண்பன். அடிக் கடி வேட்டையுடன் வரும் கினுவா விற்குக் கிட்டும் வெகுமதிகளில் அவனுக்கும் பங்கு கிடைக்கும். பாராக்காரனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், தன் அழுக்குப் பற்க ளைக் காட்டிச் சிரித்தான் கினுவா.

அது அசட்டுச் சிரிப்பா அல் லது கேலிச் சிரிப்பா என்று யாரா லும் கூற முடியாது. கினுவாவின் முகத்தில் அசட்டுப் பல்லிளிப்புத் தோன்றி யாரும் பார்த்தது கிடை யாது. அபூர்வமாக அவன் எப்போ தாவது இப்படிப் பல்லைக் காட்டுவ துண்டு. அது அசட்டுச் சிரிப்போ அல்லது அழகு காட்டுவதோ அல்ல. வெறுமனே ஒரு சிரிப்பு; அவ்வளவுதான்.

பாராக்காரன் திரும்பவும் கேட் டான்:

"ஏய், என்ன நான் கேட்கிறேன். பதிலைக் காணோம்; இன்றைக்கு என்ன வேட்டை கொண்டு வந்தி ருக்கிறாய்?"

தன் துணியில் முடிந்து வைத் துள்ளதைச் சுட்டிக்காட்டி, அன்று தான் ஒரு பெரிய வேட்டை கொண் டு வந்திருப்பதாகச் சைகை காட்டி னான் கினுவா.

"புலியா?"

இல்லையென்பதற்கு அடையா ளமாகத் தலையை மறுத்து அசைத் தான் கினுவா.

"அப்படியானால் சிறுத்தையா, கரடியா, அல்லது பன்றியா?"

கினுவா மறுபடியும் தலையை அசைத்து மறுத்தான்.

"பிறகு என்னடாஅது, கினுவா?"

இவர்களின் பேச்சுக்குரல் கேட் டு கமிஷனர் சாஹெப் பங்களாவி னுள்ளிருந்து வெளியே வந்தார். சாஹெப் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு மீண்டும் பல்லை இளித்தான் கினுவா. அன்று அவன் கொண்டுவந்துள்ள வேட்டையை அறிய சாஹெப் ஆவல் தெரிவித்த தும், கினுவா துணியை விலக்கி உள்ளிருந்த பொருளை வெளியே எடுத்தான்.

சற்று முன்பே வெட்டப்பட்ட ஒரு மனிதனின் தலை அது!

அவன் அதைச் சாஹெப்பின் காலடியில் வைத்தான்.

திகைத்துப்போன கமிஷனர் அதிர்ச்சியில் இரண்டு மூன்று தப் படிகள் பின்வாங்கினார். தன் இரண்டு கைகளையும் அவர் முன் நீட்டி,

"சாஹேப் பக்ஷீஸ்!" (சார் வெகு மதி) என்று கேட்டான் கினுவா.

சற்று நேரத்திற்குப் பின் தன் அதிர்ச்சியிலிருந்து மீண்டு, கினுவா வைக் காத்திருக்கும்படி சைகை காட்டினார் டெபுடி கமிஷனர். பங் களாவினுள்ளே சென்று ஆயுதப் பொலிசாருக்கு டெலிபோன் செய் தார். கினுவாவைக் கைது செய்ய அவருக்கு வேறு எந்த வழியும் இல் லை. அம்பு, வில், கோடரி இவற் றைத் தவிர அபாரமான உடல் வலுவும் பெற்றிருந்தான் கினுவா.

கினுவாவின் கைகளிலும் கால் களிலும் விலங்கிட்டு போலீசார் அழைத்துச் சென்றபோது அவ னுக்கு ஒன்றும் புரியவில்லை. இவ்வ ளவு பாதுகாப்பாக அழைத்துச்செல் வதன் நோக்கம் என்ன? அடுத்த வர்களிடம் பேசும் வாய்ப்புக் கிட்டி யபோது சுற்றியிருந்தவர்களிடம் அவன் விசாரித்தான். சிலர், அவ னைத் தூக்கில் போடப் போகிறார் கள் என்றனர். அவனைக் கடலுக் கப்பால் கண்காணாத தேசத்துக்கு நாடு கடத்தப் போகிறார்கள் என்ற னர் சிலர். அப்படியென்ன செய்யத் தகாத குற்றத்தை அவன் செய்து விட்டான்? அவனுக்கு அதைப்பற்றி ஏதும் தெரியாததால் மற்றவர்களின் வார்த்தைகளுக்கு அவன் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

ஒருநாள் டெபுடிகமிஷனர் ஜெயி லுக்கு விஜயம் செய்தார். என்ன நடந்தது என்பது பற்றி அவர் அவ னிடம் முழுதாகக் கேட்டறிந்தார். அவன் புலிகளையும் கரடிகளையும் மற்ற மிருகங்களையும் வேட்டை யாடிய போது அவனுக்கு உடனடி யாக வெகுமதியளிக்கப்பட்டது. இப் போது அவன் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டான். இம்முறையும் அவனுக்குத் தகுந்த வெகுமதியளிக் கப்பட வேண்டும். ஆனால், அதை ஐந்து பேர் கொண்ட ஒரு குழு கவ னமாக ஆராய்ந்த பிறகே முடிவு செய்யப்படும் என்று கமிஷனர் அவ னிடம் கூறினார். கினுவாவிற்கு மிகவும் மகிழ்ச்சியாகிவிட்டது. அவன் சந்தோஷமாகத் தன் மன நிறைவைத் தெரிவித்தான்.

ஒருநாள் அவன் மீது விசார ணை தொடங்கியது. அன்று தனக்கு வெகுமதி கிடைத்துவிடும் என்று அவன் நினைத்தான். அந்த நினைப்பால் உற்சாகமடைந்து நீதி பதியின் முன்பு நடந்ததை ஒன்று விடாமல் அவன் விவரித்தான்:

கோவிந்த சர்தாரை இந்த உல கத்திலிருந்து அனுப்புவது அன்று அவனுக்கு எளிதான காரியமாக இருக்கவில்லை. பலபேர் அவரைக் கொல்வதற்குக் காத்துக் கிடந்தனர். ஆனால் யாராலும் அது முடியவில் லை. சர்தார் எப்போதுமே காரில் தான் செல்வார். பிறரை மோசம் செய்தும் துன்புறுத்தியுமே சொத்துச் சேர்த்தவர் அவர். அவர் ஒரு சைத் தான். எத்தனை பேரைக் கொலை செய்திருக்கிறார் அவர்! எத்தனை பேரின் வாழ்க்கையை நாசமாக்கி யிருக்கிறார்! எத்தனை பெண்க ளைக் கற்பழித்திருக்காறர்! அதற்கு ஒரு முடிவே இல்லை. கினுவாவின் நிலங்களையும் மோசடியாக அவர் பறித்துக் கொண்டார்.

அன்று மாலை கினுவாவின் மனைவியைக் கெடுக்க அவர் திட்ட மிட்டிருந்தார். ஆனால் அங்கு எதிர் பாராமல் கினுவாவைப் பார்த்ததும் அவர் கார் வேகமாகப் போய்விட் டது. அவனிடமிருந்து தான் தப்பி விட்டோம் என்று அவர் நினைத் தார். ஆனால் கார் சக்கரத்தின் மீது அம்பை எய்து அதை அசை யாமல் நிறுத்திவிட்டான் கினுவா. பிறகு கோடரியால் சர்தாரின் தலை யை வெட்டிக் கையில் எடுத்துக் கொண்டு காட்டின் ஊடே இர வெல்லாம் ஓடிவந்தான். ஒரே மூச் சில் முப்பது மைல்களைக் கடந்து டெபுடி கமிஷனரின் பங்களாவை அடைந்தான்.

கோவிந்த் சர்தார் சாதாரண ஆளில்லை. எப்போதுமே கையில் துப்பாக்கி வைத்திருப்பார். புலிக ளையும் கரடிகளையும் கண்டு பயந் ததைவிட, அவரைக் கண்டுதான் ஜனங்கள் மிகவும் நடுங்கினர். புலி களும், கரடிகளும் செய்த தீங்கை விட மனிதர்களுக்கு அதிகமாகத் தீங்கிழைத்தவர் அவர். அவரைத் தீர்த்துக் கட்டுவதற்கு அவன் தைரி யத்தை மட்டும் பயன்படுத்தியிருக்க வில்லை. புத்திசாலித்தனத்தையும் பயன்படுத்தியிருக்கிறான்.

சில வருடங்களுக்கு முன்னால், ஜபத் சிங்கின் தலையை வெட்டிய தற்காக, தோராவிற்கு ஐநூறு ரூபாய் வெகுமதியளித்துப் பாராட்டிக் கௌரவித்தார் கமிஷனர் சாஹெப். ஜபத் சிங் ஒரு புரட்சிக்காரன். ஒரு வழியில் பார்த்தால் ஜபத் சிங் மிகவும் நல்லவன். அவன் எந்தப் பெண் ணையும் கற்பழித்ததில்லை. யார் சொத்தையும் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டதில்லை. அவன் அரசாங்கக் கஜானாக்களைத்தான் கொள்ளையடித்தான். சில போலீஸ் காரர்களைத்தான் கொன்றான். ஆனால் கோவிந்த் சர்தாரோ பயங் கரமான மனிதர். அவரைக் கொன் றதற்குக் கினுவாவிற்கு இன்னும் பெரிய வெகுமதி அளிக்கப்பட வேண்டும்.

கினுவாவின் இந்தக் கோரிக்கை யைக் கேட்ட அனைவரும் சிரிப்பில் வெடித்தனர்.

சிரித்துக்கொண்டே நீதிபதி கூறி னார்:

"ஆமாம்; தகுந்த வெகுமதியளிக் கப்பட வேண்டும்!"

அரசாங்க வக்கீல் சொன்னார்:

"உன்னை இங்கு கொண்டுவந் ததே உனக்குச் சரியான வெகுமதி யளிப்பதற்குத்தான்."

இந்த வார்த்தைகளில் கேலி எதையும் உணராத கினுவா, அவர்க ளின் கூற்றை உண்மையென்றே நம்பினான். ஏனெனில், நகைச்சு வை உணர்வு எதுவும் அவனுக்குக் கிடையாது. இயற்கையிலேயே அவன் உணர்ச்சிவசப்படாதவன்.

அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அப்படியென்றால் என்ன என்று அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனை மீண்டும் ஜெயிலுக்கு கொண்டுசென்றபோது, அவனுக்கு வெகுமதி வழங்கப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருப்பதாக அவனிடம் சொல்லப்பட்டது.

அப்போதும், தான் ஒரு கிரிமி னல் குற்றவாளி என்றும் அதனால் தனக்கு மரணதண்டனை வழங்கப் பட்டிருக்கிறது என்றும் அவனுக்குப் புரியவில்லை. ஜபத்சிங்கைக் கொன் றதும் கோவிந்த் சர்தாரைக் கொன்ற தும் ஒன்றல்ல என்பதை அவன் எப்படி அறிவான்? இருவரில் ஒரு வர் அந்தஸ்து மிக்கவர் என்பதும் இன்னொருவன் குற்றவாளி என்ப தும் அவன் அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம். சட்டத்தின் நுணுக்கங்க ளை அவன் மூளை எப்படிப் புரிந்து கொள்ளும்? அவன் வெறும் நாட் டுப்புறத்துத் தற்குறிதானே?

கினுவா தனக்குள்ளே சொல் லிக்கொள்கிறான். 'ஜபத் சிங்கைக் கொன்றதற்குத் தோரா ஐநூறு ரூபாய் வெகுமதி பெற்றான். அதை விடக் குறைந்த வெகுமதி எதையும் நான் ஏன் ஏற்றுக்கொள்ள வேண் டும்? அப்படி குறைத்துக் கொடுத் தால் அந்த வெகுமதியை மறுத்து விட்டு, "எனக்கு எதுவும் வேண்டாம் சாஹெப் தோராவைவிட அதிகம் பெறும் தகுதி எனக்கு இருக்கிறது" என்று நான் சொல்லிவிடுவேன்.'

இருள் சூழ்ந்த அந்தத் தனிமை யான சிறையில் அவன் அதிகம் யோசித்தான். அங்கு அவனுக்குப் பேசுவதற்குயாரும்கிடைக்கவில்லை. அவனும் யாரிடமும் பேச விரும்ப வில்லை. பரிசைப்பெற்றபின் வீட்டிற் குத் திரும்பிச் செல்வதைப் பற்றியே அவன்எண்ணமெல்லாம் இருந்தது.

இறுதியாக, அவனைத் தூக்கில் போடும் நாள் வந்தது. அவனது இறுதி விருப்பம் என்னவென்று கேட்டார்கள்.

"எனக்குரிய பரிசு" என்றான் அவன்.

"சரி! உன் பரிசைப் பெற்றுக் கொள்வதற்கு வா" என்று கூறி அவர்கள் அவனை அழைத்துச் சென்றனர். கறுப்புத் துணியால் ஆன பை போன்ற ஒரு தொப்பியால் அவன் தலையை மூடினர். கண் ணை மூடிக் கைநிறையத் தங்கமும் வெள்ளியும் கொட்டுவார்கள் என்று கினுவா எண்ணிக்கொண்டான். அரசாங்கம் ஒரு காரியத்தை உட னே செய்து விடுமா என்ன? எந்தக் காரியமானாலும் அதை நிறை வேற்ற எத்தனையோ உபகரணங் கள், விநோதமான கருவிகள், சம்பிர தாயங்கள், நடைமுறைகள், உபாயங் கள் என்று ஏராளம் இருக்கின்ற னவே! பரிசு கொடுப்பது அப்படி யான சம்பிரதாயங்கள் எதுவுமில் லாமல் நடந்துவிடுமா என்ன?

வீட்டிற்குத் திரும்பிச் சென்று அவற்றை எல்லாம் தன் மனைவிக் குக் காட்டுவான் அவன். எவ்வளவு சந்தோஷப்படுவான் அவள்! அவன் ஒரு அழகான வீடு கட்டுவான் விவசாயத்தைக் கவனிப்பான். சந் தோஷமாக வாழ்வான். எதையும் பிடுங்கிக் கொள்ளக் கோவிந்த் சர் தார்தான் உயிரோடு இல்லையே!

திடீரென்று ஏதோஒன்று அவன் கழுத்தைத் தாக்கியது.

– நன்றி: முன்றில்

## இரண்டு பீரங்கிகளின்... 9ம் பக்கத் தொடர்ச்சி

பத்திரிகை முகப்பில் 'மறுபிரசுர வெளியீடு' என போட்டுக் கொள் ளுங்கள். பத்திரிகை தர்மத்தை கை விட்டு பிழைப்பு நடத்தும் உங்களை வரலாறு என்றும் மன்னிக்காது.

புலிகளின் யாழ் குண்டுத்தாக்கு தலில் கொல்லப்பட்ட 26 பேரில் 10 அரச அதிகாரிகளும் 16 தமிழ் மக்களும் அடங்குவர்.

சூரியக்கதிர் முடிந்தபின் அதி பர் ராமலிங்கம் புலிகளால் கொல் லப்பட்டுள்ளார்.

தமிழ்ப் பொதுமக்கள் பலர் மர்ம மான முறையில் புலிகளால் கடத் திச் செல்லப்பட்டு கொல்லப்படுகி றார்கள்.

யாழ் அரசஅதிபர், அரச ஊழி யர்கள், வைத்தியர்கள் புலிகளால் கொலைப் பயமுறுத்தல்களுக்கு உள்ளாகிறார்கள்.

குடாநாட்டில் வாழும் மக்களுக் குப் போதிய உணவுப் பொருட்கள் அரசாங்கத்தால் வழங்கப்படவில் லை. அரசின் இந்தப் போக்கு வன் மையாகக் கண்டிக்கப்படத்தக்கது. எனினும் இதற்குப் புலிகளும் கார ணமாகிறார்கள். வன்னிப்பகுதி மக் கள் விடயமாக அரசின் பாராமுகத் தையும் வன்மையாகக் கண்டிக்கி றோம்.

எம் உயிரினும் இனிய மக்களே! புயலுக்குப் பின்னர்தான் அமைதி என்பார்கள். எமது மன உறுதியும் ஐக்கியமும்தான் எதிர்கால சுபிட்சத் திற்கு வித்திடும். நாம் அடக்குமுறை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வரும் நாள் வெகு தூரத்திலில்லை. எமது அபிலாஷைகள் நிறைவேற்றப் படும் தூரம் கைக்கெட்டியதாக இருந்தாலும் பாதைகள் தவறும் போது பெரும் சிரமங்களை எதிர் நோக்குகிறோம். எனவே பாதையை தெரிவு செய்து கொள்வோம்.

*கனடாவிலிருந்து வந்த துண்டுப்பிரசுரத்தில்...*

www.padippakam.com



# வேறு யாருடனும் இல்லை; நாங்கள் மக்களுடன் மட்டுமே

**1995ல்** சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து புலிகள் ஆயுதபாணிகளாக மட்டக்களப்பில் நடமாடத் தொடங்கினார்கள். அச்சமயத்தில் தமக்கு விரோதிகள் எனக் கருதும் பலரை அவர்கள் சுட்டுக் கொலை செய்து வந்தனர். அது இன்றுவரை தொடர்ந்து வருகின்றது,

புலிகளைப் பொறுத்தவரையில் தம்மைத்தவிர ஏனைய சகல தமிழ் கட்சிகளும் அவர்களுக்கு துரோகிகளே. இவ்வடிப்படையில் தத்தம் கிராமங்களில் இருந்து தமது சொந்தத் தொழில்களை செய்து வந்த பல ஈ.பி.ஆர்.எல்.எவ். தோழர்களும் புலிகளால் கொல்லப்பட்டார்கள்.

இதனால் கிராமங்களில் இருந்த பல தோழர்கள், பாதுகாப்பு கருதி தமது குடும்பங்களுடன் நகரங்களுக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டனர். மட்டக்களப்பில் இவ்வாறான பல குடும்பங்கள் நகரத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

ஆனால், இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களோ அல்லது நிவாரண உதவிகளோ நகரத்தில் கிடையாது. இதனால் இவர்களது அன்றாட வாழ்க்கையே கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

இதனால் கட்சியின் முடிவில்லாமலே இவர்கள் தமது பாதுகாப்பு கருதி இராணுவத்துடன் இணைந்து செயற்படத் தொடங்கினர். ஆனால் இவ்விடயங்கள் சரிநிகர் போன்ற சில பத்திரிகைகளாலும், ஈ.பி.ஆர்.எல்.எவ். மீது அபாண்டங்களைச் சுமத்த விரும்பிய சில இயக்கங்களாலும், சில தனிநபர்களாலும் பூதாகரப்படுத்தப்பட்டன.

"மட்டக்களப்பில் மண்டையன் குழு" போன்ற சில தலைப்புகளைப் போட்டு பல சமயங்களில் பிரச்சினைகளை பூதாகரப்படுத்தியும், சில சமயங்களில் பொய்களைச் சொல்லியும் பத்திரிகைச் செய்திகளும் வெளிவந்தன.

புலிகளின் ஜனநாயக விரோத, காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளே சில தோழர்கள் இராணுவத்துடன் சேர்வதற்கான காரணம் என்பதை முதலில் தெளிவாக குறிப்பிட விரும்புகிறோம்.

ஆனால் அதேசமயம் ஈ.பி.ஆர்.எல்.எவ். மாத்திரமே இதுவரை சிறிலங்கா ராணுவத்துடன் இணைந்து செயற்படாத ஒரே ஒரு அமைப்பு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஈழ விடுதலைப் போராட்ட கால கட்டத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் முதன் முதலாக இணைந்து செயற்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே. 1989, 90 ஆம் ஆண்டுகளில் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஐயும், இந்திய அமைதிப் படையையும் இல்லாதொழிக்க இவர்கள் கொழும்பில் பிரேமதாசாவுடனும், அம்பாறையில் அதிரடிப்படையுடனும், மட்டக்களப்பு திருமலையில் இராணுவத்துடனும் இணைந்து செயற்பட்டனர். இதன் மூலம் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரிகளுடன் இணைந்து துரோகமிழைத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே.

இதன் பின்னர்தான் தமது சொந்த தேவைகள், பாதுகாப்புகள் கருதி பல இயக்கங்கள் அரச படைகளுடன் இணைந்து செயற்பட்டது. ஆனால் அப்பொழுது கூட ஈ.பி.ஆர்.எல்.எவ். சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படவில்லை. இதனால் கொழும்பில் கூட எமது தோழர்கள் இராணுவத்தால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். மீது மிக மோசமான நெருக்குவாரங்கள் தொடுக்கப்பட்டபோது கூட நாம் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து புலிகளுக்கெதிராக போராடுவதில்லை என்பதில் உறுதியாக இருந்தோம். இன்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தனது கொள்கையில் உறுதியாகவே இருக்கின்றது.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். இல் இருக்கக்கூடிய சில தனிநபர்கள் இராணுவத்துடன் இணைந்து போராட வேண்டிய நிலைக்கு, அவர்களை புலிகள் நிர்ப்பந்தித்தனர் என்பது கசப்பான உண்மையே.

அவர்களின் பிழையான அணுகுமுறையை களைவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமைப்பீடம் அவர்களுடன் கடந்த இரண்டு மாதம் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. அவர்களின் தேவைகளை ஈ.பி.ஆர்.எல்.எவ். இனால் பூர்த்தி செய்ய முடியாததால் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறவில்லை என்பதையும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் அடிப்படைக் கொள்கைக்கமைய, அவர்கள் கட்சியிலிருந்து கொண்டு இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதென்பதை அவர்களுக்கு தெளிவாக கூறியுள்ளோம்.

புலிகள் அராஜகவாதிகள், பாசிஸ்டுகள், பயங்கரவாதிகள் என்பதில் எமது கட்சி தெளிவாகவே இருக்கின்றது. புலிகள் மக்கள் நலனைவிட தமது சொந்த நலனையே பிராதானப்படுத்துபவர்கள் என்பதிலும் நாம் தெளிவாக உள்ளோம். புலிகளின் கடந்த கால நடவடிக்கைகளும் தற்போதைய நடவடிக்கைகளும் ஈழவிடுதலைப் போராட்டத்தை சின்னாபின்னப்படுத்தியுள்ளது என்பதே உண்மை.

ஆனால் இவற்றுக்கெதிராக போராட ஈ.பி.ஆர்.எல்.எவ். ஜனநாயக வழிகளிலேயே நம்பிக்கை கொண்டுள்ளது. மக்களை இணைத்த ஜனநாயகப் போராட்டங்களினூடு மாத்திரமே ஜனநாயகச் சூழலையும், சமாதானத்தையும், அமைதியையும் உருவாக்கமுடியும் என்பதிலும் நாம் மிகவும் தெளிவாக உள்ளோம்.

> மக்களை இணைத்த ஜனநாயகப் போராட்டங்களினூடு மாத்திரமே ஜனநாயகச் சூழலையும், சமாதானத்தையும், அமைதியையும் உருவாக்கமுடியும் என்பதில் நாம் மிகவும் தெளிவாக உள்ளோம்

புலிகளின் ஆத்திரமூட்டும் ஆயுத வன்முறைகள், படுகொலைகள், இவற்றில் இருந்து எம்மை பாதுகாக்க ஆயுதங்கள் தேவைப்பட்டாலும் கூட, ஆயுதக் கலாச்சாரத்தினூடு அமைதியை கொண்டுவர முடியும் என்பதில் எமக்கு சிறிதளவும் நம்பிக்கை கிடையாது.

இக்கருத்துகளை எமது தோழர்கள் ஏற்றுக்கொண்ட போதும் கூட யதார்த்தத்தில் தமது சொந்த வாழ்வு, புலிகளின் அச்சுறுத்தல் போன்றவற்றை காரணம் காட்டி மட்டக்களப்பில் சில தோழர்கள் இராணுவத்துடன் இணைய முடிவு செய்துள்ளனர்,

அவர்களது நிலையில் அவர்கள் எடுத்த முடிவில் பல நியாயங்கள் இருக்கக் கூடும். ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எவ். அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனால் இராணுவத்துடன் இணைவதென்று முடிவெடுத்த சகல தோழர்களையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியிலிருந்து வெளியேற்றியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் அவர்களது நடடிக்கைகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தெளிவுபடக் கூறிக்கொள்கிறது.

இவர்கள் இராணுவத்தில் இணைந்து, இராணுவத்தின் ஓர் பிரிவாக செயற்படுவதால், கட்சியின் எந்தவோர் அங்கத்திலும் இவர்கள் இல்லை என்பதுடன், இவர்களின் சரி பிழைகளுக்கும் இராணுவமே பதில் கூற வேண்டும் என்பதையும் திட்டவட்டமாக தெரிவிக்க விரும்புகிறோம்.

இவர்களது நடவடிக்கைகளால் கடந்த ஓரிரு மாதங்களாக மட்டக்களப்பில் ஏதாவது அசௌகரியங்கள் மக்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதற்காக மனம் வருந்துகிறோம். ஈ.பி.ஆர்.எல்.எவ். தொடர்ந்தும் தனது கொள்கைகளில் உறுதியாக இருக்கும் என்பதை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ●

அங்கே இல்லை நான்
நிறையப் பேர்
நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்
அப்படித்தான்
இங்கே இருப்பதும் நிச்சயமில்லை
இதுவும் உண்மை
எங்கேயும் இருக்க முடியவில்லை
மரம்போல ஒரே இடத்தில்
இருக்கவும்
கொடுத்து வைத்திருக்க வேண்டும்
வருத்தப்பட்டு பிரயோஜனமில்லை
முத்திரை குத்தி
ஓய்ந்துவிட்டார்கள் எல்லோரும்
எனக்குத்தான் தெரியும்
இருக்கிறமாதிரி இருக்கிறதன்
வேதனை

– விக்ரமாதித்யன் –

## ஐ.தே.க.வின் நிலைப்பாடு



இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு விடயத்தில் ஐ.தே.கட்சி, தீர்வு என்பதனைவிட குழம்பிய குட்டையில் மீன்பிடித்தல் என்ற நிலைப்பாட்டையே கடைப்பிடிக்கிறது.

ஒற்றையாட்சி அமைப்பை மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை என்பதனை பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் றொனி டி மெல் தெரிவித்ததன் பின்னர், சொக்ஸி, 'ஒற்றையாட்சி அமைப்பு மாற்றப்படக்கூடாது; அரசியலமைப்பின் 76வது சரத்து நீக்கப்பட வேண்டும்' என்றும் கூறியுள்ளார். இவை இரண்டும் புதிய தீர்வுத்திட்ட யோசனைகளில் நீக்கப்பட்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒற்றையாட்சியமைப்பை நீக்க வேண்டாமென்று தமது கையை எவரும் முறுக்க வேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

நாடு இனப்பிரச்சினையால் அழிந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இவர்கள் வெளிப்படுத்தும் பொறுப்புணர்ச்சி எத்தகையது என்பதற்கு றொனி, சொக்ஷி, ரணில் போன்றவர்களின் அபிப்பிராயங்கள் சான்று பகர்கின்றன.

இந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் மக்கள் மூன்று மிகப்பெரிய இன வன்முறைகளுக்கு முகம் கொடுத்தார்கள். இந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கீர்த்திமிகு தலைவர்களால் தான் தமிழ் மக்களுக்கெதிரான நச்சுக் கருத்துக்கள் தூவப்பட்டன. 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று சொன்னவர்களும், சிங்களவர்களை மரமாகவும், தமிழர்களை செடிகொடிகளாகச் சித்தரித்தவர்களும் இன்னும் ஐக்கிய தேசியக் கட்சியினரால் மதிக்கப்படும் மூத்த தலைவர்கள்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் உருவாக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபை சட்ட விரோதமான முறையில் கலைக்கப்பட்டதும் இந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் தான்.

எப்போதும் போல் இவர்கள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடாத்தவே முனைகிறார்கள்.

தமது அதிகார அபிலாஷைகளுக்காக இவர்கள் தமிழ், முஸ்லீம் மக்களை பலிக்கடாக்களாகவே முனைகிறார்கள்.

ஆனால் ஒரே ஒரு ஆரோக்கியமான அம்சம் கொழும்பு மேயர் கணேசலிங்கம், முன்னாள் வெளிவிவகார அமைச்சர், ஏ.சி.எஸ்.ஹமீட் காதர் எம்.பி. போன்ற ஐக்கிய தேசியக் கட்சியின் சிறுபான்மையின உறுப்பினர்கள், அரசின் தீர்வுத் திட்ட யோசனைகள் ஆக்கபூர்வமான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார்கள்.

அதேபோல் கிழக்கின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரும் குரல் எழுப்பியுள்ளார். தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினுள் நெருக்குதல்களை உருவாக்குவது ஆரோக்கியமான அம்சமே. ஏனைய சிறுபான்மை இன உறுப்பினர்களும் நெருக்குவாரத்தைக் கொடுக்க முன்வர வேண்டும்.

தீர்வுத் திட்ட யோசனைகளை பரிசீலிப்பதற்கு அரசின் நடைமுறைகள் சரியில்லை என்று ஐ.தே.கட்சி பேசி வருகிறது. அதற்கு அரசினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்களைப் பற்றிக் கூறுகிறார்கள் போல் தெரிகிறது.

கடந்த 17 வருடங்களில் ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் மக்களுக்கெதிராகச் செயற்பட்ட ஜனநாயக விரோத செயற்பாடுகள், மனித உரிமை மீறல்கள் விவாதிக்கப்பட வேண்டியவையே.

எத்தனை பேர் புதைகுழிகளுக்கனுப்பப்பட்டார்கள்? எத்தனை வதை முகாம்கள் நடாத்தப்பட்டன? எத்தனை பேர் ரயர் மாலை போடப்பட்டு எரிக்கப்பட்டார்கள்? எத்தனை பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் சதிகாரத்தனமாக கொல்லப்பட்டார்கள்? இத்தகைய கொடூரச் செயல்களில் யார் யார் சம்பந்தப்பட்டார்கள் என்ற உண்மைகள் மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும்.

இங்கு ஜனநாயகம் உயிருடன் இருப்பது பற்றி, மனித உரிமைகளை நிலைநாட்டுவது பற்றி யாராவது அக்கறை கொண்டிருந்தால் இந்த விசாரணைக் கமிஷன்கள் முக்கியமானவை என்பதனை அவர்கள் மறுக்க முடியாது.

ஆனால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு இந்த விசாரணைக் கமிஷன்களை விலையாகக் கேட்பது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் செயலாகும்.

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் வரலாற்றின் முட்டுச் சந்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எதையெல்லாம் இழக்கக்கூடாதோ, எவையெல்லாம் விலைமதிக்க முடியாதவையோ அவற்றையெல்லாம் இழந்திருக்கிறார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் சுயமரியாதை, கௌரவம், மற்றவர்களுடன் சமதையான வாழ்வு. இவையெல்லாம் துச்சமாக மதிக்கப்பட்டால், இவையெல்லாம் எள்ளி நகையாடப்பட்டால், அவர்களுக்கு ஒரே ஒரு மாற்று வழிதான் உண்டு. அதுதான் தனிநாடு.

- எஸ். திருநாவுக்கரசு



22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தினபிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியடப்படுகிறது.